உ

குருபாதம்

குன்றக்குடி

திருக்கைலாய பரம்பரை

திருவண்ணாமலை ஆதீன வரலாறு

ஸ்ரீமத் தெய்வசிகாமணி

குருபூசை விழா மலர்

அருணை
ஆதீனச் சீடர் சங்க
வெளியீடு

T14698
R005D06
T.14698

திருக்கைலாய பரம்பரை
திருவண்ணாமலை ஆதீனப் பெருங்குரவர்
ஸ்ரீமத் தெய்வசிகாமணி தேசிக பரமாச்சாரிய
சுவாமிகள்

உ

செந்திலாதிபன் துணை

குருபாதம்

குன்றக்குடி

திருக்கைலாயபரம்பரை

திருவண்ணாமலை ஆதீன வரலாறு

சார்வரி — ஆவணி — புரட்டாதி

ஸ்ரீமத் தெய்வசிகாமணி
அருணாசலதேசிக பரமாச்சாரிய சுவாமிகளின்
ஆணையின்வண்ணம்

திருவண்ணாமலை ஆதீனப்புலவர், சித்தாந்தசைவமணி
கும்பகோணம்
வித்துவான், சு. சுவர்ணகாளீச்சுரரால்
எழுதப்பெற்றது

ஆதீனச்சீடர்கள் சங்கவெளியீடு

திருச்சிற்றம்பலம்

இருபதின் மேலிரு
நான்காக மங்களும்
ஈரிரண்டு
சுருதியின் வாக்கிய
முந்தவ ருதுமெய்த்
தொண்டர் மனத்
திருண்மல பாசத்
தைநீக்கி மெஞ்ஞான
வியற்கை தருந்
திருவரு ளசலத்
தேவசி காமணிச்
சிற்குருவே

(சிற்குருமாலை)

திருச்சிற்றம்பலம்

உ

குருபாதம்

பதிப்புரை

திருக்கைலாய பரம்பரையில் வந்த சுத்தசைவ ஆதீனங்கள் பதினெட்டு. அவற்றுள் தொன்மையான ஆதீனங்கள் சிலவற்றில் ஒன்று நமது திருவண்ணாமலையாதீனமாகும்.

இவ்வாதீன வரலாற்றின் சுருக்கமாகிய இந்நூல் ஸ்ரீமத் தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாச்சாரிய சுவாமிகளது அருட்கொடையால் வெளிவருகின்றது.

இம்மலரை நமது ஆதீனப் பெருங்குரவராம்ஸ்ரீமத் தெய்வசிகாமணியின் பொன்னார் திருவடிக்கமலங்களுக்குச் சாத்தி மகிழ்கின்றோம்.

இங்ஙனம்
அருணையாதீனச்சீடர்கள்

செய்ய தமிழும் சிவநெறியும்
சிறக்கத் தொண்டு புரிந்திடுவோன்
ஐயன் குன்றக்குடி அடிகள்
அருணசலதேசிகநாதன்
தையல் பாகன் தண்ணருளால்
சமயச் செங்கோல் இனிதோச்சி
வையம் புகழப் பல்லாண்டு
வாழ்க ! வாழ்க ! வாழ்கவே !

(கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.)

திருக்கைலாயபரம்பரை திருவண்ணுமலையாதீனத்து
45-வது பட்டத்திலெழுந்தருளி அருளாட்சிபுரியும்
ஸ்ரீமத், தெய்வசிகாமணி அருணசல தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்
(குன்றக்குடி அடிகளார்)

உ

செந்திலாதிபன் துணை

குருபாதம்

குன்றக்குடி திருக்கைலாய பரம்பரை

திருவண்ணுமலை ஆதீன வரலாறு

அருணையின் சிறப்பு.

திருவண்ணுமலை ஐம்பெரும்பூதத் தலங்களுள் ஒன்ருகும். திருவாரூரில் பிறந்து வாழ்ந்தால்தான் பரமன் அருட் செல்வம் கிட்டும். காசியம்பதியில் சென்று இறந்தால்தான் கண்ணுதலோன் அருளும் முத்தியும் கிட்டும். தில்லைக்குச் சென்று அங்குள்ள எல்லையில்லாப் பரம்பொருளைத் தரிசித்தால்தான் தெவிட்டாத பேரின்ப முத்தி கிட்டும். ஆனல் இவற்றைப் பெருதவர்கள் என் செய்வது? ஏங்கி ஏங்கிக் காலத்தை வீணுக்குவதா? இல்லை. இல்லை. ஆனைத்திரள்சாரும் அண்ணுமலையாரை எண்ணிய மாத்திரமே இன்ப உலகு எய்தலாம் என்பது ஆன்ருேர் திருவாக்கு.

அருணை, மலை சூழ்ந்த பதி. மரங்களின் கூட்டமும் மலர்களின் ஈட்டமும், மேகத்திரளும், மனதைக் கவர்வன. கடுவன் (ஆண் குரங்கு) ஓர் நாள் தன் காதலி மந்தியுடன் கூடி விளையாடியது. கனி உதிர் சோலை எல்லாம் ஓடி விளையாடியது. மந்தியின் மனம் கனிமீது பாய்ந்தது. கடைக்கண் நோக்கினல் கடுவன் அதனை நோக்கியது. கிளை நோக்கி அக்கடுவன் பாய்ந்தது. உயர்ந்த மரம் கடுவனுக்குப் பணிந்தது. ஆனல் மரத்தின் நுனிக்கொம்பு மலையைத் தழுவி நிற்கும் மேகத்திரளோடுறவாடிக்கொண்டிருந்தது. கடுவனின் இழுப்புக் கஞ்சி நுனிக்கொம்புகனிவுடன் கனியைக் கொடுக்கத்

தலை தாழ்ந்தது. கனியைப் பறித்தக் கடுவன் கிளையை விட்டது. விடு கொம்பு மீண்டும் மேகத்திரளோடு விளையாடப்போய் மோதித் தீண்டியது. என்ன அற்புதம்! கொம்பின் தீண்டலால் குளிர்ந்த நெஞ்சு கொண்ட அந்தக்கொண்டல் தூமா மழை என துருவல் மிசை நுண் துளியாகத் தெளித்தது. அதுகண்டு அங்கு காதல் புரியும் பிணை எல்லாம் பொழில் அணைந்து இன்பம் எய்தின. இத்தகைய இயற்கைச் சித்திரத்தை நமது ஞானசம்பந்தப்பெருமான் திருவருணைப் பதியில் நமக்குக் காட்டியருளுகின்றார்.

பெருமான் திருக்கோயில் ;

பெருமான் வாழும் மலை,வளமிக்க மலை. மரங்களும், கொடிகளும், பூக்களும், அரும்பிய பொழில் நிறைந்தது. மண்ணார்ந்த அருவித்திரள் மலையினின்றும் சள சள வென்று ஓடின. மலை முகட்டின் அருவி மண்ணகத்தே வீழ்ந்தது. அது எழுப்பும் ஒலி இனிமையான மெல்லிய முழவு அதிர்தல்போல் ஒலித்தது. அது எம்பெருமான் பூசைக்கு உதவி புரிந்தது. உண்ணாமுலை பெற்று உலகை உய்விக்கும் உமையாளோடும் அண்ணாமலையார் அங்கு வீற்றிருந்தருளுகின்றார். அவரைத்தொழுவார் அனைவரின் வினைகளும் அறவே அழிந்து, இன்பம் அடைவர். பேரின்பக் கடலில் மூழ்கித் திளைப்பர். அத்தகுதிருக்கோவில் சோழ, பாண்டிய நாயக்க, மன்னர்களால் திருப்பணி செய்யப்பெற்றது. 'குற்றத்தின் கொள்கலன் யான்' என்று கூறி அழுதார் அருணகிரியார். இவ்வுடலை மாய்ப்பேன் எனக்கூறினார். கோபுரத்தின்மேல் ஏறிக்குதித்தார். அது கண்ட குமரன் கை கொடுத்துக்களித்தார். அருணகிரியார் உளம் குளிர்ந்தார். வழிபட்டார். தமிழ்க்கவி தழைத்தது. மனம் நிறைந்த ஞான அனுபவம் திருப்புகழாக மலர்ந்தது.

சிவமே பரம்பொருள் :

நான்முகனும் திருமாலும் மனம் முறிவு கொண்டனர். இருவரில் யார் வலிவு மிக்கவர் என வாதிட்டனர். முடிவுகாண நடுவரைத் தேடினர்கள். அப்பொழுது அப்பணி செஞ்சடை ஆண்டவன் அங்கு எழுந்தருளினர். ஜோதி வடிவாய்த் திகழ்ந்தார். வடிவு வளர்ந்துகொண்டே சென்றது. இறைவனின் திருக்காட்சி இருவரையும் மலைக்கச் செய்தது. முடியைத்தேட அன்னமாய்ப் பறந்தான் நான்முகன். அடித்தொடத் திருமால் பன்றியாய்ச் சென்றார். இருவரும் முயன்றனர். இறுதியில் தோல்வி கண்டனர். சிவமே பரம்பொருள் எனத்தெளிந்தனர். இத்தகைய சிவபரத்துவத்தை நிலைநாட்டிய திருப்பதியே திருவண்ணமலையாகும். அப்பதியில் திரு அவதாரம் செய்தருளிய ஸ்ரீமத் தெய்வசிகாமணி தேசிக குருமூர்த்தியின் நல்லருளால் நிலை நாட்டப்பெற்ற ஆதீனமே திருவண்ணமலை ஆதீனமாகும். இவ்வாதீன குரு மரபை குறித்த வரலாறுகள் சிலவற்றைக் காண்போம்.

திருக்கைலாய பரம்பரை :

திருக்கைலாய மலையில் அருள்வடிவாகிய கல்லால மரம் இருக்கிறது. அம்மர நிழலிலே தென் முகப் பரமனய் இறைவன் எழுந்தருளி இருந்தார். அது சமயம் பதிபசுபாச, இலக்கணத்தை உணர்த்தும் சிவஞான போதத்தை நந்தியம் பெருமானுக்கு இறைவன் உரைத்தருளினர். தாம்பெற்ற சிவஞானச் செல்வத்தை நந்தியம் பெருமான் தனது அருமை மாணவராகிய சனற்குமார முனிவருக்கு அருளிச் செய்தார். அதனை அவர் தம்மாணவருள் சிறந்த சத்தியஞான தரிசனி என்னும் முனிவருக்கு அருளினர்.

அவர் அதனைப்பரஞ்சோதி முனிவருக்கு அருளிச் செய்தார். திருக்கைலாயத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சி இது.

மெய்கண்டார் :

நடுநாட்டிலே திருப்பெண்ணுகடம் என்னும் தலம் உள்ளது. அத்தலத்தில் சைவவேளாண் மரபில் அச்சுதகளப்பாளர் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் பெருஞ்செல்வர். அவருக்கு நெடுநாள் வரை மகப்பேறு இல்லை. வருந்தினர். தமது குல குருவாகிய சகலாகம பண்டிதரிடம் சென்று தன் கவலையைத் தெரிவித்தார். திருத்துறையூரிலுள்ள சகலாகம பண்டிதர் தன் அருமைச் சீடரது துயரை நீக்கத் திருவுளம் கொண்டார். தமிழ் மறையாகிய தேவாரத் திருமுறைகளை அருச்சித்து கயிறுசாத்தினர். அப்போது திருஞான சம்பந்தர் அருளிச்செய்த தேவாரத்திலே திருவெண்காட்டு திருப்பதிகத்திலுள்ள,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினேடுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே"

என்னும் திருப்பாட்டு தோன்றிற்று. அச்சுதகளப்பாளர் அத்திருப்பாட்டில் கூறப்பட்டவாறு தமது மனைவியோடு திருவெண்காட்டினை அடைந்தனர். முக்குளத்தீர்த்தத்தில் முறைப்படி நீராடினர். இறைவனைவழிபட்டனர். அந்நாளில் தனது மனைவியார் கருக்கொண்டார். அச்சுதகளப்பாளர் சிவாகம விதிப்படி பத்துமாதங்களில் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்வித்தனர். ஓர் நல்ல நாளிலே சற்புத்திரர் திரு அவதாரம் செய்தார். களப்பாளர் அகம்மிக மகிழ்ந்தார். ஸ்ரீசுவேதவனப்பெருமான் திருவருளால் தோன்றிய

தமது திருக்குமாரருக்கு சுவேதவனப் பெருமாள் எனப் பிள்ளைத்திருநாமம்சாத்தி தனது இருப்பிடமாகிய திருபெண்ணுகடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அக்காலத்தில் திருவெண்ணெய்நல்லூரிலிருந்த காங்கேயபூபதி என்பவர் தமது சகோதரரின் புதல்வரைக் காண திருப்பெண்ணுகடத்திற்கு வந்தார். அக்குழந்தையை தம் வீட்டிற்குக்கொண்டு சென்று வளர்த்து வருவாராயினர்,

முன்பு நந்தி பரம்பரையிலே சிவஞான போத உபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவர் மகத்துவமிக்க அகத்திய முனிவரைக்காண மிகுந்த ஆவலுடன் பொதிகைக்குச் சென்று கொண்டிருந்தார். செல்லும் வழியிலே திருவெண்ணை நல்லூரிலே இரண்டு வயதுக்குழந்தையாய் விளையாட்டயரும் நமது சுவேதவனப் பெருமானைக்கண்டார். அவருடைய பக்குவத்தைத் தெரிந்து சிவதீக்கை செய்து மெய்கண்டார் எனத் திருநாமம் சாத்தினர். தாம் பரம்பரையில் கேட்ட சிவஞான போதத்தை அவருக்கு உபதேசித்தார். மெய்கண்டார் நாமெல்லாம் உய்யச் சிவஞான போதத்தைத் தமிழகத்திற்குத் தந்தருளினர்.

அருணந்தி சிவாச்சாரியார் :

திருத்துறையூரிலே எழுந்தருளியிருந்த சகலாகம பண்டிதர் இச்செய்தியைத்தெரிந்தார். திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தருளினர். ஸ்ரீ மெய்கண்ட தேவரை வணங்கி தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினர். அவரது பக்குவ நிலையைக் கண்டு ஸ்ரீ மெய்கண்ட தேவர் சிவதீக்கை செய்து சிவஞான போதத்தை உபதேசித்து இந்நூலை விரித்துரைக்க எனக் கட்டளையிட்டார். அருணந்தி எனத் தீட்சா நாமம் அருளினர்.

குரவர் இட்ட கட்டளையை சிரமேல் தாங்கி 'சிவஞான சித்தியார், என்னும் பெரு நூலைத் தந்தருளினர். அவர்களுடைய சீடருள் ஒருவராகத் திகழ்ந்தவரே நமது திருவண்ணுமலை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீமத் தெய்வ சிகாமணி தேசிக பரமாச்சாரியமூர்த்திகளாவார்கள். இனி அவரது வரலாற்றைக் காண்போம்.

நமது ஆதீனக் குரு முதல்வர் :

முப்போதும் திருமேனி தீண்டும் பெரும் பேறு பெற்ற ஆதிசைவ பரம்பரையில் திருவண்ணுமலையிலேயே திரு அவதாரம் செய்தவர் நமது ஆதீனப் பெருங்குரவராவர். இத்தகைய பெரும் பேற்றை பெற்ற தாய் தந்தையர்கள் நமது அருட் குரவராம் தெய்வக் குழந்தையை நன்முறையில் வளர்த்து வந்தனர். பதினறு வயது ஆகுமுன்பே கற்கவேண்டியவற்றைக் கற்று, கேட்க வேண்டியவற்றைக்கேட்டு, உணர வேண்டியவற்றை உணர்ந்து பக்குவ நிலையை அடைந்தார். அதுகண்டு பெற்றோர் பெறுதற்கரிய பெரும் பொருள் கிட்டியதாக மகிழ்ச்சி கொண்டனர்.

இறைவனின் அருட் காட்சி :

ஒருநாள் மாலை நேரம். தெய்வசிகாமணியுடன் தந்தையார் திரு அருணைத் திருக்கோவில் சேர்ந்தார். முப்போதும் திருமேனி தீண்டும் பேறு பெற்றவர் அல்லவா தந்தையார். தந்தையார், திருக்கோயில் கருவறைக்குச் சென்ருர். இறைவனின் திருமேனிக்குத் திரு முழுக்கு ஆட்டுவித்து, வழிபாடு செய்து கொண்டிருந்தார். உடன் சென்ற தெய்வசிகாமணி திருக்கொடிமரத்தை அடைந்ததுமே தன்னை மறந்தார். கைலைமலை உச்சியில் உள்ளானை வேண்டி நின்ருர். மனம் உருகி வழிபட்டார். கல்லும் கரையும் வண்ணாம் கானம் எழுப்பிக் கசிந்து உருகினர். கொடிமரம் மின்னிற்று.

எங்கும் அமைதி! எங்கும் அருளாட்சி! எங்கும் வியப்பு! அருணசலப்பெருமான் இடபாரூடராய்த் தோன்றினர். கொடி மரத்தின் அருகில் குருமுனி வடிவாம் திருமேனியுடன் நின்ருர். கண்டதும் குருமுதல்வர், திருவடிகளில் விழுந்து பணிந்தார். ஆடினர். பாடினர். ஆனந்தக்கூத்தாடினர். "அன்பனே, நீ, அருள்நந்தியை அடைவாயாக", எனக்கூறி இறைவன் மறைந்து அருளினர். முனிவராக வந்த இறைவனைக்காணது நமது தெய்வ சிகாமணி திகைத்தார். அப்பொழுது தனது தந்தையார் பூஜையை முடித்து மைந்தரைக்கண்டு வீட்டிற்கு அழைத்தார். செல்ல மறுத்தார் நமது ஞான வள்ளல். ஆண்டவன் அருளிய ஞானசிரியனைத்தேடிப் புறப்பட்டார் திருத்துறையூருக்கு.

அருள்நந்தி சிவாச்சாரியாரிடமும் கனவில் இறைவன் தோன்றி நமது அன்பன் தெய்வசிகாமணி திருவண்ணமலையிலிருந்து உன்னை நாடி வருகிருன். அவனுக்கு ஞானேபதேசம் செய்வாயாக எனக்கூறி மறைந்தருளினர். சிவாச்சாரியார் துயில் நீங்கி இறையருளைச் சிந்தித்து அப்பெருமானை வாழ்த்தி, நமது தெய்வசிகாமணியின் வருகையை எதிர்நோக்கி நின்ருர். நமது சிகாமணி விரைந்து சென்ருர். ஆண்டவன் உணர்த்திய ஆசிரியரது திருவடியில் வீழ்ந்து வணங்கினர். அருள்நந்திசிவாச்சாரியரும்தன்நாற்பத்தெட்டுச் சீடர்களுள் ஒருவராக நமது குரு முதல்வரை ஏற்றருளினர். சிவஞான போதத்தை உபதேசித்து அருளினர். நமது ஞானப்பெருங்குரவர் இறைவனே சுயம்புவாக தமது ஆத்மார்த்த பூசைக்கு எழுந்தருள வேண்டும் எனப்பேராவல் கொண்டார். தனது ஞானசிரியரிடத்து விண்ணப்பித்தார். ஆசிரியரும் இறையருளைச் சிந்தித்து காளத்திக்குச் செல்லுமாறு கட்டளை இட்டார்.

அக்கட்டளையை சிரமேல் தாங்கி, காளத்தியை அடைந்தார் நமது கருணைக் குருமுதல்வர். காளத்தி மலையைக் கண்டபோதே கசிந்து கண்ணீர் மல்கினர். இரு கைகளையும் தலைமேல்கூப்பினர். 'காளத்தி அப்பா! காளத்தி அப்பா!' எனக்கதறிக்கொண்டே திருக்காளத்தி அப்பர் திருமுன்பே அடைந்தார். அடி அற்ற மரம் போல் வீழ்ந்தார். தன்னை மறந்தார். அப்பொழுது காளத்தி அப்பர் கனவிலே தோன்றி, "அன்பனே, நாம் திருக்கோயில் அருகே உள்ள புற்றிலே சிவலிங்க உருவாய் திகழ்கின்றோம், அங்கு வருவாயாக" எனக் கூறி மறைந்தார். அவ்வாறே எழுந்தோடிச்சென்று புற்றருகே காளத்தி அப்பராம் புனித வாழ்வை சிவ லிங்க வடிவில் கண்டு, எடுத்து, மார்போடு அணைத்தார். மட்டிலா மகிழ்ச்சி கொண்டார். அப்பெருமானே நமது ஆதீன மடாலயத்திலே எழுந்தருளி இருக்கும் காளத்தி அப்பராவர்,

நமது குரு முதல்வர் காளத்தியை விட்டகன்று திருவருணைப்பதியை அடைந்தார். அங்கு விளைவித்த பேர் அதிசயங்கள் பலவாம். அவற்றுள் ஒன்றைமட்டும் இங்கு காண்போம்.

குதிரைக்கு உயிர்கொடுத்த குருமுனிவர் :

ஒருநாள் அரசன் பவனிவந்தான். குதிரைகள் புடைசூழ்ந்து வந்தன. படைகள் பின்தொடர்ந்தன. அப்பொழுது அரசனின் பட்டத்துப்புரவி பதறி வீழ்ந்தது. கடல் நுரையென, வாய் நுரையைக் கக்கிற்று. குதிரைக்கு கொடும்நோய் கண்டது. சிறிது நேரத்தில் புரவி தன் உயிரை இழந்தது. எங்கும் பரபரப்பு. அரசன் முகத்தில் கவலை தெரிந்தது, மக்கள் எல்லாம் வருந்தினர். இந்தநேரத்தில் நமது தெய்வசிகாமணி எதிரே காட்சி அளித்தார். அரசன்

நமது தவமுனிவரின் திருவடியை வணங்கினன். குறைநீக்க வேண்டினன். குறுமுறுவல் பூத்தார் குருமுனிவர்; திருமந்திரமாம் திருஐந்தெழுத்தை ஓதினர்; திருவருளைச் சிந்தித்தார்; திருநீற்றை புரவியின் மீதுதெளித்தார். புரவியும் படுத்து உறங்கி, விழித்தது போல் எழுந்தது. மன்னன் மகிழ்ந்து கரங்குவித்தான். மக்கள் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினர். குருமுனிவர் தனது திருக்கரத்தால் அம்மன்னவனையும் மக்களையும் வாழ்த்தினர். இத்தகைய குருமுனிவரது கருணைத் திறத்தை சிலைவடிவாக திருவண்ணமலையில் இன்றும் காணலாம். குருமுனிவரது திருவருளால் பலப்பல சித்துகள் நிகழ்ந்தன. கொடிய விலங்குகளும் தன்குணம் நீங்கி, அருள்உள்ளம் பெருகிநின்றன. சிறுத்தையும், பசுவும் ஒன்று கூடிவிளையாடின. இந்த உலகம் அறியாத புதுமை கண்டு விண்ணவரும், மண்ணவரும் வியந்து நின்றனர். தனது அருமைச்சீடர்களுக்கு சிவஞான போதத்தை அருளிச் செய்து திருவருணைப் பதியிலேயே குருமூர்த்தமாயினர்.

17-வது பட்டத்து அரசு

தெய்வசிகாமணி பரமாச்சாரிய சுவாமிகள் பரம்பரையில் பல குருமூர்த்திகள் பட்டத்திற்கு வந்தார்கள். குருநாதர் தேர்ந்தெடுத்த சீடர்களோ மிகவும் முதிர்ந்த திருவருள் பண்பாடுதேங்கிய அருளாளர்கள். குருவருள் ஒன்றே அவர்களது குறிக்கோளாக விளங்கியது. சிவஞான மேலிட்டால் தன்னைமறந்து தியான சமாதியில் அமர்ந்தனர். இந்தக் குருபரம்பரையில் 17-வது பட்டத்தில் எழுந்தருளிய குருமுனிவர் ஸ்ரீலஸ்ரீ நாகலிங்கதேசிக குருமூர்த்திகள் ஆவார்கள். அப்பெரியார் உலகம் வாழ

நாம் வாழ்ந்தனர். நல்லவற்றையே நினைத்து, சிறந்த சிவநெறியே பேணினர். இறைவனைப் பற்றியே எடுத்தியம்பினர்.

இராமேஸ்வர யாத்திரை :

இத்தகைய நாகலிங்கதேசிக குருமூர்த்தி அவர்கள் தென்னாட்டில் திருத்தல யாத்திரை செய்யத்திருவுளம் கொண்டு தென்னாட்டிற்கு எழுந்தருளினார்கள். திருக் கோயில் வலம் வந்து, தீர்த்தம்ஆடி இறைவழிபாடு செய்து மகிழ்ந்தனர். ஆங்காங்கே அறிஞர்களும், சான்றோர்களும், பக்தர்களும் குருநாதரை வரவேற்றார்கள். பக்திபரவசத்தால் கண்ணீர் மல்கினார்கள். தொண்டுபுரிந்துபேறு பெற்றார்கள். குருமகா சந்நிதானம் அவர்களும் மனம் இரங்கி. கருணைபூத்து அவர்களுக்கு சிவஞானத்தின் சிறப்பை உபதேசித்து, அருள்மழை பொழிந்துவந்தார்கள். இங்ஙனம் திருவண்ணமலையிலிருந்து எழுந்தருளிய குருமூர்த்தி, விருத்தாஜலம், சிதம்பரம், மாயூரம், திருவாரூர், ஆவுடையார்கோவில், திருவாடானை, காளையார்கோயில் முதலிய திருத்தலங்களை வழிபட்டு திருச்சுழியலுக்கு எழுந்தருளினார்கள்.

இராமநாதபுரம் அரசர் :

திருச்சுழியலுக்கு சுவாமிகள் எழுந்தருளி உள்ளதைக்கேட்ட இராமநாதபுரம் அரசர் எல்லையிலா மகிழ்ச்சி பூத்தார். குருடன் கண்ணொளி பெற்றது போலக்களித்தார். நமது குருமூர்த்தியின் பெருமையை முன்பே தெரிந்தவர். ஆதலால் ஓடோடியும் வந்தார் சேது காவலர். குருமூர்த்தியின் திருவடிகளிலே பணிந்தார். இராமேஸ்வரத்திற்கு எழுந்தருள வேண்டும் என்ற சுவாமிகளின் திருவுள்ளக்குறிப்பை

உணர்ந்த மன்னர் உடனே ஆவன செய்தார். அரசர் ஏவலர்கள் புடைசூழ குருமகாசந்நிதானம் அவர்கள் இராமேஸ்வரம் சென்று தீர்த்தமாடி இறைவழிபாடு செய்து திரும்பினர். வருங்காலே மன்னர் இம்மாவட்டத்திலேயே எழுந்தருளி அருளாட்சி புரிய வேண்டும் என்று வேண்டினர். பொன்னும் மணியும் காணிக்கையாக செலுத்தினர். அவரது வேண்டுதலே கண்ட குருநாதர் கருணை கொண்டார். ஆகவே தமது சீடர்களில் ஒருவரை குரு பீடத்தில் இருத்திவிட்டு தாம் திருவண்ணாமலேக்கு எழுந்தருளினர். தேர்ந்தெடுத்த அக் குருமூர்த்திகள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பிரான்மலேயில் தனது அருளாட்சியை துவங்கினர்கள்.

பிரான்மலேயிலிருந்து குன்றக்குடிக்கு வருதல் :

இந்த மரபு வாழையடி வாழையாக பிரான்மலேயிலிருந்து திருவருள் ஆட்சி புரிந்தது. அருளும், தவமும் அறமும் செறிந்த அருளாளர்கள் இந்த ஆதீனத்தில் விளங்கினர்கள். அற்புதங்கள் பல செய்தார்கள். நாளடைவில் இவ்வாதீன குருமூர்த்திகள் குன்றக்குடியில் வந்து தங்கத் துவங்கினர்கள். காளத்தியப்பரை மடாலயத்தில் எழுந்தருளச் செய்தார்கள். அன்றுமுதல் இதுகாறும் திருவண்ணாமலே ஆதீன மடாலயம் குன்றக்குடியில் திகழ்ந்து வருகின்றது.

பெரிய ஆறுமுக தேசிக குருமூர்த்தி :

இவ்வாதீனத்தின் 38-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி புரிந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ பெரிய ஆறுமுக தேசிக குருமூர்த்தி ஆவார்கள். இவர்கள் காலத்தில் இவ்வாதீனம் மிகச்சிறந்து விளங்கியது. சபாபதி முனிவர் என்னும் பெரியார் இவ்வாதீனத்துக்

கார்பாராக இருந்து ஆவன செய்தார்கள். ஆதீன மடாலயமும் இப்பொழுது இருக்கும் நிலையில் பெரிதாகத்திருப்பணி செய்யப்பெற்றது. குருமகாசந்நிதானம் அவர்கள் சபாபதி முனிவரிடத்திலேயே எல்லாப் பொறுப்பையும் விடுத்து தாம் சிவபூஜை, சிவஞானபோத உபதேசம் இவற்றிலேயே காலங் கடத்தினர்கள். இவர்கள் காலத்திலேயேதான் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள் குன்றக்குடிக்கு வந்தார்கள். குரு மகா சந்நிதானம் அவர்கள் நாவலர் அவர்களை நன்கு பாராட்டி எவ்வாதீனமும் செய்யாத சிவிகை (பல்லக்கு) ஊர்வல மரியாதையும் செய்வித்து, கௌரவித்தருளினர்கள். வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சு அய்யர் அவர்களைக்கொண்டு சண்முகநாதருக்கு உலா ஒன்று இயற்றுவித்தார்கள். அவ்வுலாவில் அக்கால ஆதீன சிறப்பையும் ஐந்து கோவில்களிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் படம் பிடித்துக் காட்டப்பெற்றிருக்கிறது. இவர்கள் காலத்தில்தான் பெரிய புராண உரை வகுத்த ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் இருந்தார்கள். அவர்களிடம் பாடம் கேட்டு வந்த குட்டித் தம்பிரான் சுவாமிகளை திருவாவடுதுறை ஆதீனம் 16-வது பட்டம் மேலகரம் ஸ்ரீ சுப்ரமணியதேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் விருப்பத்தின்படி திருவாவடுதுறைக்கு அனுப்பி அருளினர்கள் நமது ஆறுமுக தேசிக பரமாச்சாரிய சுவாமிகள். (அக்குட்டித்தம்பிரான் சுவாமிகளே பிற்காலத்தில் 17-வது பட்டம் ஸ்ரீ அம்பலவாண தேசிக குருமூர்த்திகள் ஆவார்கள்.) திருவாவடுதுறை ஆதீன குருபீடத்திற்கு தகுதியாகத் தம் ஆதீனத்திலிருந்து ஒரு அடியவரை அனுப்பியதுபோல திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்தும் திருவண்ணமலை ஆதீனத்திற்கு ஒரு அடியவரை அழைத்துவர எண்ணி அதனைத் திருவாவடுதுறை ஆதீன ஸ்ரீ சுப்ரமணிய

தேசிக குருமூர்த்திக்கு திரு அப்பாப்பிள்ளை என வழங்கிய சுவாமிநாத பிள்ளை அவர்கள் மூலம் தெரிவித்தனர். அதன் வண்ணம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களது மாணவருள் ஒருவராகிய வித்துவான் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அவர்களை குன்றக்குடிக்கு அனுப்பி வைத்தனர். மகாசந்நிதானம் அவர்கள் ஆதீன இளவரசாக நியமித்தனர். இவ்வாறு பெரிய ஆறுமுக தேசிக குருமூர்த்திகள் திருவருள் ஆட்சி புரிந்து காளத்தியப்பரது திருவடியை அடைந்தார்கள்.

39-வது பட்டத்திற்கு எழுந்தருளிய ஆறுமுக தேசிக சுவாமிகள் :

குருமூர்த்திகள் மகா வித்துவானாகத் திகழ்ந்தார்கள். தமிழும் சைவமும் வாழ ஆவன செய்தார்கள். தமிழ்ப் புலவர்களையும் சைவப் புலவர்களையும் நன்கு ஆதரித்து வந்தார்கள். தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத ஐயர் அவர்கட்கு சிலப்பதிகாரத்தின் சிறந்த ஏட்டுப்பிரதியை உதவியருளினார்கள். அதனை ஐயர் அவர்கள் தான் வரைந்த என் சரித்திரத்தில் பாராட்டி குரு மகா சந்நிதானத்தை வாழ்த்தி அவர்களது திரு உருவப் படத்தையும் வெளியிட்டு மகிழ்ந்தார்கள், தெய்வ சிகாமணி நான்மணி மாலை முதலிய நூல்களை அச்சிட்டு வழங்கினார்கள். இவ்வாறு நல்லாட்சி புரிந்து அண்ணாமலையார் திருவடி நிழலில் அமர்ந்தருளினார்கள்.

தாண்டவராய தேசிக சுவாமிகள் :

40-வது பட்டத்தில் அமர்ந்து அருளாட்சி புரிந்த இக் குருமூர்த்தி அவர்கள் கொடைவள்ளலாகத் திகழ்ந்தார்கள். வரவு முதலியவற்றையும் சிந்தியாது வாரிவழங்கி அருளினார்கள்.

நடராஜ தேசிக குருமூர்த்தி:

அடுத்து 41-வது பட்டத்தில் எழுந்தருளிய இக் குருமூர்த்தி அவர்கள் போற்றத்தக்க புண்ணிய சீல ராவர். திருமடத்தின் சொத்துக்களைக்காக்கவும், அபி விருத்தி செய்யவும் இரவு பகல் பாடுபட்டார்கள். அவர்களது ஆட்சியில் திருமடத்துச் சொத்துக்களும் திருக்கோவிலின் சொத்துக்களும் வெளியார் கைவசம் ஆக்கப்பட்டிருந்தன. அதுகண்ட குருமகா சந்நி தானம் அவர்கள் கொஞ்சமும் தளராது அரும்பாடு பட்டு கண்துஞ்சாது, மெய்நோவாது ஆவனசெய்து அச்சொத்துக்களை மீட்டார்கள். பல அரும் பெரும் செயல்களைச் செய்தார்கள். நவரெத்தினம் பதித்த கிரீடத்தை குன்றக்குடி குமரனுக்கு அணிவித்து மகிழ்ந்தார்கள்.

அண்ணாமலை தேசிக குருமூர்த்தி:

42-வது குருமூர்த்தியாக எழுந்தருளிய அண்ணா மலை தேசிக குருமூர்த்தி அவர்கள் சிறந்த சித்தராவார்கள். சித்த நூல்களில் நன்கு பயிற்சி உள்ளவர்கள். உணவை வெறுத்து, மௌன மூர்த்தியாகப் பலகாலம் இருந்தருளினார்கள். முரு கனிடத்து அயராத பக்தி உடையவர்கள்.

பொன்னம்பல தேசிக குருமூர்த்தி:

43-வது பட்டத்தில் எழுந்தருளியவர்கள் ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகராவார்கள். இப்பெரியார் சைவத் திருமுறைகளில் நன்கு திளைத்தவர்கள். கீழ்வேளூர் சொக்கலிங்க ஐயா அவர்களிடம் தேவாரத்திரு முறைகளை நன்கு பயின்றவர்கள். அவர்களுடன் பயின்றவர்கள் எனது அருமைத் தந்தையார் காளையார் கோவில் தேவாரம் சுப்பையா ஓதுவாமூர்த்திகள்

உள்ளிட்ட பலராவார். பட்டத்திற்கு எழுந்தருளிய பின்னர் தமது ஆசிரியர் சொக்கலிங்கஐயா அவர்களை குன்றக்குடியிலேயே இருக்கச்செய்து அவர்களது இறுதிக்காலம் வரையில் ஆதரித்தார்கள். நிர்வாக சம்பந்தமான வழக்குகள் பலவற்றில் திருவருளின் மீது நம்பிக்கை வைத்து வெற்றிவாகை சூடினர்கள். திருவண்ணமலையாதீன மடாலயசொத்துக்கள் பிறர் கைவசம் இருப்பதை அறிந்து அதனைமீட்க ஆவன செய்தார்கள். ஸ்ரீ சண்முகநாதருக்கு குடமுழுக்குவிழா செய்துகண்டுகளித்தார்கள். பிரான் மலை, திருக்கோளக்குடி, திருப்புத்தூர் ஆகிய சிவாலயங் களுக்கு வெள்ளிரிஷபவாகனம் செய்வித்தருளினர்கள். குருமகாசந்நிதானத்திடம் குன்றக்குடிக் குமரன் என்றும் திருநடம் புரிந்து வந்தான். குருநாதர் அவர்கள் சதுர்வேதிமங்கலத்திலுள்ள ஆத்மநாயகி யிடம் பெரிதும் ஈடுபாடு உடையவர்கள். ஓர் நாள் ஆத்மநாயகியின் அர்த்தஜாம பூசைக்கு உரிய நைவேத் தியங்களில் சர்க்கரைப்பொங்கல் இல்லாமல் நைவேதிக்கப்பட்டது. அன்றிரவே குருமகாசந்நி தானத்தின் கனவில் ஆத்மநாயகி எழுந்தருளி, "எனக்குச் சர்க்கரைப் பொங்கல் படைப்பதிலா உனக்கு குறைந்துவிடுகிறது" என்று கேட்டருளினள். காலையில் எழுந்தவுடன் பூஜையைமுடித்து, சதுர்வேதி மங்கலம் (மட்டியூர்) சென்றருளினர்கள். உண்மையை அறிந்து குறையை நீக்கி, வழிபட்டுத் திரும்பியருளினர்கள், இவ்வாறே திருப்பத்தூர் திருத்தளிநாதர் ஆலயத்தில் வீற்றிருக்கும் பைரவ மூர்த்தி குருநாதர் கனவில் தோன்றி அருளினர். தனக்கு குதிரை வாகனம் வேண்டுமென்று கேட்டருளினர். அவ்வாறே திருப்பத்தூர் பெரு மானுக்கு குதிரைவாகனம் செய்வித்து, பெருமானை

வழிப்பட்டு மீண்டனர். தனக்கு மனச்சோர்வு ஏற்பட்டபொழுதெல்லாம் மடாலயத்துமேல் மாடியில் இருந்துக் கொண்டே முருகன் சந்நிதானத்தை நோக்கி தேவாரத் திருபாடல்களை வீணையில் வைத்து வாசித்து மகிழ்வார்கள். இவர்கள் காலத்தில் இவர்களோடு ஒத்துழைத்து ஆதீனத்திற்கு வேண்டியபணிபுரிந்தவர்கள் புதுக்கோட்டை செல்லையா பிள்ளை அவர்களும், சோமசுந்தரம் பிள்ளை அவர்களும் ஆவார்கள். அவ்விருவரிடத்திலும் குருமகா சன்னிதானம் அவர்கள் மிகுந்தபற்று வைத்திருந்தார்கள். மேலும் திருக்கோயில் தோறும் திருவாபரணங்கள் பலசெய்வித்தனர். தங்கத்தில் செய்த கண்டசரமும், பதக்கமும், சங்கிலியும் முருகனுக்கு குருமகாசந்நிதானம் அவர்களது கைங்கர்யம் ஆகும். ஆதீனமடாலயத்திலும் வெள்ளிக்குத்துவிளக்கு முதலியவை செய்வித்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகதேசிக குருமூர்த்தி :

நாற்பத்தி நான்காவது பீடத்தில் எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகதேசிகர் அவர்கள் சில காலமே ஆட்சி புரிந்தார்கள். பல தோட்டங்களையும், வளர்த்தார்கள். தருமை ஆதீனத்திலிருந்து இப்போது நல்லாட்சி புரியும் நமது குருமகாசந்நிதானம் அவர்களைக் கொண்டுவந்து இளவரசராக்கிய பெருமை ஆறுமுக தேசிக பரமாச்சாரிய சுவாமிகளையே சேரும். இளவரசரின் துணைகொண்டு குன்றக்குடியில் வானொலிப்பூங்கா அமைத்தார்கள். திருக்கோளக் குடியிலும் மின்விளக்கு முதலியவற்றைக் கொண்டு வந்து ஆவன செய்தார்கள். மகா சந்நிதானம் அவர்கள் இப்பொழுது அருளாட்சி புரியும் அருணசல தேசிக குருமூர்த்திகளுக்கு அருளாட்சியை ஈந்து

பரிபூரணநிலை அடைந்தார்கள். 45-வது குருமகா தேசிக சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் அருணாசல பரமாச்சாரிய சுவாமிகள் சைவமும், தமிழும் உய்யச்செய்துவரும் தொண்டுகளை நாம் நேரிலேயே கண்டு மகிழ்ந்து வருகின்றோம்

இனி நமது ஆதீன அடியவர்கள் திருக்கூட்டத்தில் சிறந்து விளங்கிய பெரியார்களைப் பற்றிச் சிந்திப்போம்.

ஆதீன அடியவர் திருக்கூட்டம்

ஞானப்பிரகாச முனிவர்: ஆதீன அடியவர்கள் திருக்கூட்டத்தில் மேன்மையாக வைத்து எண்ணப்படு பவர் நமது ஞானப்பிரகாச முனிவராவார். ஞானப் பிரகாச முனிவர் பெருமான் ஈழ நாட்டினர். நல்லூர் என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள். சைவ பரம்பரையில் பாண்டி வேளாள மரபைச் சேர்ந்தவர்கள். யாழ்ப் பாணம் ஆறுமுக நாவலர் அவர்களின் பாட்டனர் ஆவார்கள். சிறந்த சிவநெறிச் செல்வராய்த் திகழ்ந்த வர்கள். ஞானம் வேண்டி நமது அருமைத் தமிழ்நாடு அடைந்தார்கள். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீ னத்தை அடைந்தார்கள். குருமூர்த்திகளின் கட்டளைப் படி வடக்கே தீர்த்த்யாத்திரைக்குச் சென்றார்கள். அங்கு வடமொழிக் கல்வியைச் சிறந்த முறையில் கற்றுச் சிவாகம அறிவு நிறையப் பெற்றார்கள். சிதம்பரம் அடைந்து திருக்குளம் தோண்டி தில்லைக்கூத்தனை வழிபட்டு மீண்டும் குருமகாசந்நிதானத்தை அடைந் தார்கள். குருமூர்த்திகளும் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தெரிந்த அச் சீடருக்கு ஞான காஷாயம் அருளி, ஞானப்பிரகாச முனிவர் என தீட்சாநாமம்

சூடினர். ஆசிரமம் பெற்ற ஞானப்பிரகாசர் ஞான விளக்காய் விளங்கினர்கள். நமது ஆதீனப் பெருங் குரவராம் தெய்வசிகாமணிக்கு ஞானசிரியராக விளங் கிய அருணந்தி சிவாச்சாரியார் செய்தருளிய சிவஞான சித்திக்கு சிறந்த உரை உரைத்தார்கள். (மற்றும் இவர் களது நூல்களின் சிறப்பை ஆதீனப் பனுவல்கள் என் னும் தலைப்பில் காணவும்) வடமொழியிலும் பற்பல நூல்கள் இயற்றிப் பெருமை பெற்ற பெரியார் ஆவார் கள். இப்பெரியார் ஈழத்திலிருந்து நமக்கு கிடைத்தது முதல் ஈழநாட்டினர் தொடர்பு இப்பொழுது நல்லாட்சி புரியும் நமது குருமகாசந்நிதானம் வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சங்கரலிங்க முனிவர் : குன்றக்குடித் திருமடத்தில் சங்கரலிங்க முனிவர் அமர்ந்திருந்து பல மாணுக்கர் களுக்கு தமிழ் அறிவையும், சிவஞானச் செல்வத்தையும் வாரி வழங்கி வந்தார்கள். பிற்காலத்து வாலசரஸ்வதி என்று வழங்கிய முத்துவேலுக்கவிராயர் இவரது மாணுக்கர் என்பது கவிராயரின் சீட்டுக் கவிகளால் நமக்குத் தெரிய வருகிறது. முனிவரை நாற்கவி விலா சம் என்றும், மெய்த்தவ ஞான பூரணன் என்றும், சைவா கம பொக்கிஷம் என்றும் அச்சீட்டுக் கவிகளில் கூறப் படுகின்றன. திருப்பூவணத்தில் பிறந்தருளிய வேதாந்தம் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இம்முனி வரது மாணுக்கரேயாவர். இவரால் பாடப்பெற்றதே குன்றக்குடி வரலாற்றைக்கூறும் மயூரகிரிப்புராணம் ஆகும். மருதப்பாண்டியரது அவைக்களப்புலவர் களாகத் திகழ்ந்த 40 புலவர்களில் பலர் நமது முனிவரது சீடர்கள் ஆவார்கள்.

அப்பொழுது குன்றக்குடியில் காடன் செட்டியார் என்பவர் மந்திரத்தில் தலை சிறந்து விளங்கினர்.

ஓர் நாள் சிவகங்கைப் பகுதியை ஆண்ட மருது பாண்டியனுக்கு முதுகில் பிளவை உண்டாயிற்று. வேதனையால் மன்னன் வெதும்பினுன். கொடிய நோய் அவனை வாட்டிற்று. மருத்துவர்களின் கைத்திறன் பலிக்கவில்லை. மயங்கினுன் மன்னன். காடன் செட்டியாரைக்கொண்டுவரக் கட்டளையிட்டான். காடன் செட்டியாரும் சென்ருர். மந்திரத்தால் பிளவையை உடைத்தருள்களன்ருன் மன்னன். செட்டியார் அவர்கள் மறுமொழி புகன்றனர். தனக்கு மந்திரம் தெரியாது குன்றில் வாழும் குமரனை நினைத்து திருநீறு தருவோம் என்றனர். அதன்படியே திருநீறும் வழங்கினர். இரவே குமரன் அருளால் மன்னன் கண் அயர்ந்தான். மற்ற யாவரும் உறங்கினர். நடுநிசியில் மன்னன் கனவில் யாரோ முனிவர் வந்தார். மன்னன், முதுகிலுள்ள கட்டியை பிதுக்கிவிட்டதாக உணர்ந்தான். விழித்தான் வேந்தன். கட்டி உடைந்து சீழும், செந்நீரும் கக்கியது. என்னே! அற்புதம்! என்னே! முருகனின் திருவருள்! எனவியந்தான். வாயார வாழ்த்தினுன். தலையாரப் பணிந்து கைக் கூப்பி வணங்கினுன். *காடன் செட்டியாருக்குச் சிறப்பு செய்தான். குன்றக்குடி நோக்கிப் புறப்பட்டான். மலையில் முருகன் எழுந்தருளிய கோவில் மிகச் சிறியதாக இருப்பதையும் அதனைச் சங்கரலிங்க முனிவர் போற்றிவருவதையும் கண்டான். நமது சங்கரலிங்க முனிவரை மன்னன் கண்டதும் தன் வசம் இழந்தான். திருவடிகளைப் பற்றிப் போற்றினுன். துதித்து வணங்கினுன். அள விறந்த பொற்காசுகளை திருவடிகளில் சமர்ப்பித்து வணங்கினுன். தவநெறிச் செல்வராம் நமது முனிவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார்கள். உடனே மன்னன்

*காடன் செட்டியாரது திருவுருவம் தோகையடி விநாயகர் திரு முன்பு இருக்கிறது.

அப் பொன்னைக்கொண்டு ஒரு கிராமத்தை உண்டாக்கி அதற்கு "செம்பொன்மாரி" எனப் பெயரிட்டு காளத்தியாருக்கு காணிக்கையாகச் செலுத்தினன். முருகனுக்கு மயூரகிரிக் கோவை என்னும் பாமாலையைத் தனது அவைக்கள புலவராகிய சாந்துப்புலவரைக் கொண்டு சாத்துவித்தான். அக்கோவையில் நமது சங்கரலிங்க முனிவர் இரண்டு இடங்களில் புகழப்படு கிருர். ஞானவள்ளலாகத் திகழ்ந்த நமது முனிவர் கொடைவள்ளலாகவும் திகழ்ந்தார். தன் கை கொடுப் பதை தன் மெய்யே அறியாத நிலையில் கொடுப்பார். கவிஞரோடு கவிஞராக ஒட்டி வாழ்வாராம். இதனை சாந்துப்புலவர் தமது மயூரகிரிக் கோவையில்.

"கையன்றி மெய்யறி யான் கொடைப் பாலிற் கவிஞர்தம்பான்
மெய்யொன்று சங்கர லிங்கத் தபோநிதி"

எனப் பாராட்டுவர். இன்னும் இவரது பெருமையை விரித்தால் இதுவே தனி நூலாகிவிடும். ஆதலால் இதனுடன் அமைவோம்.

ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்: சைவாதீனங் களில் சென்னையாம் நமது தலைநகரில் பழமையான கட்டளை மடங்கள் உள்ள ஆதீனம் நமது திருவண்ணு மலை ஆதீனமே. நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு விலுள்ள நமது ஆதீனக்கட்டளை மடத்தில் நமது ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் வசித்து வந்தார்கள். மகா வித்துவாஞக விளங்கினுர்கள். பல புலவர்களுக்கு இலக்கிய, இலக்கண, சாஸ்திர பாடங்களைக் கற்பித் தார்கள். நமது ஆதீனத் தம்பிரான்களில் பலர் இவ ரிடம் கல்வி பயின்று சிறப்புற்ருர்கள், அவர்களில் ஒருவரே திருவாவடுதுறை ஆதீனத்தில் 17-வது பட்டத்தில் விளங்கிய அம்பலவாண தேசிக குரு மூர்த்தி ஆவார்கள். இவரது கலை நுட்பத்தைக்

கொண்டே இவரது ஆசிரியராகிய நமது ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளது புலமையை நன்கு அறியலாம். இவர்கள் சைவத்திற்கு இயற்றிய தொண்டுகளில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கது பெரிய புராண உரையாகும். பெரிய புராணம் முழுவதற்கும் சிறந்த பதவுரை இயற்றித்தந்த பெருமை நமது ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளையும், நமது திருவண்ணமலை ஆதீனத்தையுமே சாரும்.

அமிர்தலிங்கத்தம்பிரான் சுவாமிகள் :

இப்பெரியார் சென்னையிலுள்ள மற்றொரு கட்டளை மடமாகிய நமது ஆதீன மைலாப்பூர் மடத்தில் எழுந்தருளி இருந்தவர்கள். பெரிய புராண உரை இயற்றிய ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் காலத்திற்கு முற்பட்டவர். மைலாப்பூரில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளும் இறைவனிடம் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். கவி இயற்றுவதில் வல்லவர்கள். இப்பெரியாரால் இலக்கண இலக்கிய சாஸ்திரப்புலமை பெற்றவர்கள் பலராவர். இம்முனிவர் இயற்றிய பல நூல்களில் இப்போது நமக்கு ஏட்டுப்பிரதியாகக் கிடைப்பது திருமயிலைப் புராணம் ஒன்றே ஆகும்.

சரவண சுவாமிகள் : இம்முனிவரும் நமது ஆதீன மைலாப்பூர் கட்டளை மடத்தில் எருந்தருளி இருந்தவர்களேயாவார்கள். இவர்கள் காலத்தில் கிறிஸ்தவர்கள் கடல் அருகே வாழும் மக்களுக்கு வைத்தியம் முதலிய உதவிகள் செய்து தனது சமயக் கருத்தை அவர்களுக்குப் பரப்பி வந்தார்கள். இதனைக்கண்ட நமது சரவண சுவாமிகள் சித்த வைத்திய முறையில் பல மருந்துகள் செய்து அக்கடற்கரை வாழ் மக்களுக்கு உதவி, சைவசமயக் கருத்துக்களை

நீண்டநேரம் அவர்கள் மனதில் பதியுமாறு விரிவுரையாற்றுவார்களாம். இதனை நேரில் கேட்டு அனுபவித்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இப்பெரியாருக்கு 'சபாப்பிரசங்கசிங்கம்' என்னும் பட்டத்தை வழங்கினார்கள் என்றால் இவர்களது பெருமையை நம்மால் கூற இயலுமா? இவர்கள் அக்கட்டளை மடத்தில் சற்றேறக் குறைய 50 ஆண்டுகளுக்கு மேல் எழுந்தருளி இருந்தார்கள். உ. வே. சாமிநாத ஐயரவர்கள் முதன் முதலில் சென்னைக்குச் சென்று தமிழ் இலக்கிய ஏடுகள் தேட முயன்றபோது அவர்களுக்கு உதவியாக தனது தள்ளாத 70-ஆவது வயதிலும் அவர்களுடன் சென்று ஏடு இருக்கும் இடங்களை எல்லாம் காட்டி, அவைகளைப் பெறும் முறைகளையும் கூறினார்கள். இவ்வுதவியை தமிழ்த்தாத்தா அவர்கள் என் சரித்திரத்தில் மிகவும் பாராட்டிக் கூறியுள்ளார்கள்.

குமரசாமி முனிவர்: இப்பெரியார் நமது ஆதீனப் பெருங்குரவரது திருவடிகளுக்குப் பல பாமாலைகள் சாத்திமகிழ்ந்தவராவர். சிற்குருமாலை முதலிய இவரது நூல்கள் திருவாசகத்தைப்போல் மக்களது மனத்தைக் கனிவிக்கும்.

சபாபதி முனிவர்: இப்பெரியார் 38-வது பட்டத்தில் எழுந்தருளி இருந்த, பெரிய ஆறுமுகதேசிக குருமூர்த்திக்கு, கார்பாராக இருந்து பல தொண்டுகள் செய்தருளியவர்கள், மேகம் போன்ற கைமாறு கருதாத கொடைவள்ளல். இதனை, வேம்பத்தூர் பிச்சு ஐயர் அவர்கள் தான் இயற்றிய சண்முகநாதர் உலாவில்,

நன்மை திகழ் கார் பாரேன் றேபெருமை கைக்கோடை
[காட்டுஞ்சிறந்த
கார் பாரேன்றே புலவர் கண்டுரைக்கும்—சீர்போர்த்த
நன்மை திகழும் சபாபதி மாமுனி''

எனச் சிலேடையாகப் பாராட்டி உள்ளார். இவர் காலத்தில் திருமடம் ஒளிபெற்று விளங்கியது. இப்பொழுதுள்ள திருமடக்கட்டிடங்கள் முழுவதும் இம்முனிவராலேயே கட்டப்பெற்றன. இதனை குன்றக்குடி குறவஞ்சி ஆசிரியர்,

ஆழிசூ ழுலகின்மீ தார்குன்றை நகரினும்
ஊழிதோறும் அழிவிலா தோங்குபுகழ் புண்யநிலை
நிற்கட்டு மென்றே நினைத்தல்செய் தெழில் குலவு
கற்கட்டு மடமும் கவின்றரப் பிரதிட்டை
செய்சபா பதிமுனி.

மற்றும் நெற்களஞ்சியங்கள் பலவற்றையும் நிறுவினார்கள். கும்பகோணத்திற்கு அருகிலுள்ள நிலங்களையும் வாங்கி நல்ல முறையில் விளைச்சலுக்கு ஆவன செய்தார்கள். இன்று ஆதீனமடத்தில் பயன்படுத்தப்படும் பாத்திரங்களில் பல அவர்களே வாங்கியருளியவை. இவர்களது திருவுரும் இவர்களது சொந்தப் பொறுப்பில் கட்டியருளிய ஆதீன முன் மண்டபத்தில் இருந்து நம்மை எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. இப்பொழுது பட்டத்தில் வீற்றிருந்து அருளும் குருமகாசந்நிதானம் அவர்கள் தனது நன்றியை அறிவிக்கும் பொருட்டு வைகாசி விசாக நன்னாளில் முருகன் எழுந்தருளும் பொழுது இத்திருவுருவத்திற்குப் பரிவட்டம் கட்டச் செய்து மகிழ்கின்றார்கள். என்னே! எம் குருநாதரின் நன்றி செலுத்தும் நற்பண்பு!

இராமலிங்கத்தம்பிரான்சுவாமிகள் : இப்பெரியாரும் நமது திருமடத்தின் அபிவிருத்திக்காக அல்லும் பகலும் பாடுபட்டவராவார்கள். பிரான்மலைப்பகுதியில் மாணிக்கவல்லி, அபிராமவல்லி, சுவர்ணவல்லி, அமிர்தவல்லி, மரகதவல்லி என்னும் பெயர் அமைத்து ஐந்து தோப்புகளை உண்டாக்கினார்கள். அத் தோப்புகள் இப்பொழுதும் ஆதீனத்திற்கு நல்ல பலனைத்தந்து கொண்டிருப்பதைக் காணலாம். அவர்கள் வைத்த மாவும், தென்னையும் அவர்களின் நினைவை இப்போதும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறன. இப்பெரியாரும் தனது சொந்தப்பொறுப்பில் வயல்கள் வாங்கி, ஆதீனத்திற்கு விட்டிருக்கிறார்கள். காஷ்மீர், நேபாளம் முதலிய நாடுகளுக்கும் சென்று அங்கு தேடிய பொருள்களைக்கொண்டு நமது ஆதீனத்திற்குச் சொந்தமான திருகோளக்குடி, பள்ளப்பட்டி ஆகிய இடங்களில் கட்டளை மடம் கட்டுவித்தார்கள். திருக்கோளக்குடிக்கு அப்பொழுது மதுரை ஆதீனத்தில் அருளாட்சி புரிந்து வந்த குருமகாசந்நிதானம் அவர்களைக் கொண்டு தலபுராணம் இயற்றுவித்தார்கள்.

வேலாயுதத்தம்பிரான் சுவாமிகள் : இவர்கள் சிறந்த புலமை படைத்தவர்கள். நிர்வாகத்துறையிலும் வல்லவர்கள். 'பரதேசி முத்திரை' என்ற மரியாதையைப் பெற்றவர்கள். இப்பெரியார் குன்றக்குடிக்கு அருகிலுள்ள காட்டாத்தாங்குடி என்னும் கிராமத்திற்குச் சென்றிருந்தார்கள். அங்கிருந்த பொய் சொல்லா மெய்யரென்னும் ஐயனாருக்கு ஆதீனத்தின் சார்பாக பூசை நடந்தது. அப்பொழுது அக்கிராம வாசிகள் மழை இல்லாக்குறையை சுவாமிகளிடம் கூறி முறையிட்டார்கள். உடனே சுவாமிகளும், அங்கிருந்த

ஐயனுரை நோக்கி ஒரு திருப்பாடலைப் பாடினார்கள். மழையும் பெய்தது. மக்கள் மனமும் குளிர்ந்தது. இதோ அந்தப் பாடல்

தருணமி துவாகுந் தான்மாரி பெய்யக்
கருணை செய்யா திருக்கலாமா ? —வருணனிடம்
நீருரைத்து பொய்சொல்லா மெய்யரே யிந்நிமிடம்
மாரிபெய்யச் செய்வீர் வரம்.

தியாகராஜத்தம்பிரான் சுவாமிகள் : இப்பெரியார் மடாலயத்திற்கு வேண்டும் திருநீற்றைத் தயாரித்து உதவுவார்கள். இவ்வாதீனத்தைச் சார்ந்த பாண லிங்கங்கள் பலவற்றைச் சேகரித்தவரும், பாதுகாத்த வரும் இப்பெரியார் என ஒரு நூல் கூறுகிறது. இவர் இவ்வாதீனத்திற்கு வாங்கித் தந்த வயல் தியாக ராஜ வயல் எனப் பெயர் பெறும் என்று குன்றக்குடிக் குறவஞ்சி கூறுகிறது.

கைலாசத்தம்பிரான் சுவாமிகள் : இப்பெரியார் கும்பகோணம் கிளை மடத்தில் கட்டளையாக நீண்ட நாள் பணி ஆற்றி வந்தார்கள். ஒரு சமயம் கும்ப கோணத்தில் இருந்த சொத்துக்களைப் பிறரால் அப கரிக்கப்படாது செய்த பெருமை இவ்வடியவரையே சாரும். இதனை இவ்வாதீனத்தில் எழுந்தருளியிருந்த பொன்னம்பல தேசிக குருமகாசந்நிதானம் அவர்கள் பலமுறை கூறுவார்கள். மேலும் தருமையாதீனத்தி லிருந்து இப்பொழுது அருளாட்சி செலுத்தும் அருண சல தேசிக குருமகாசந்நிதானம் அவர்களைக் கூட்டி வந்து நாமெல்லாம் பயனடையுமாறு செய்தவர்களும் இத்தம்பிரான் சுவாமிகளேயாவார்கள்.

அடியவர் திருக்கூட்டம்: இன்னும் இவ்வாதீன அடியவர்கள் பலராவர். அவர்களது விரிந்த வரலாறுகள் நமது குருமகாசந்நிதானம் அவர்களது அருளால் தனிநூலாக வெளிவர இருப்பதால், இதனை இத்துடன் நிறுத்துகிறோம். இவ்வாதீனச் சொத்துக்களில் பல ஆதீனச்சீடர்களாலேயே உண்டாக்கப்பெற்றன. இதனை குன்றக்குடி குறவஞ்சி விரிந்த முறையில் கூறும். அவர்களால் வாங்கப்பெற்ற வயல்கள் அவர்கள் பெயராலேயே வழங்கப்பெறுவதையும் அறிகிறோம்.

ஆதீனப்புலவர் பெருமக்கள்: குருமூர்த்திகளோடு திருக்கூட்டத்து அடியார்களிலும் உயரிய நல்லோர் பலரையும் உருவாக்கிவிட்ட பெருமை நமது ஆதீனத்திற்கு உண்டு. பல பெரும் புலவர்களும், மகாவித்துவான்களும் இங்கு வந்து இருந்து அருந்தமிழ் வளர்த்தார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் (யாழ்ப்பாணத்து நல்லூர்) இங்கிருந்த பெரிய ஆறுமுக தேசிக குருமூர்த்திகளால் பாராட்டப்பெற்றமையை முன்பே அறிந்தோம். சாந்துப் புலவர், மகா வித்துவான் சிலேடைப் புலி பிச்சு ஐயர், உ. வே. சாமிநாத ஐயர், யாழ்ப்பாணம் தில்லைநாத நாவலர் முதலியோர் இவ்வாதீன முன்னோர்களால் பாராட்டப்பெற்றோர் ஆவார். இங்கு இவ்வாதீனத்தில் வேலை பார்த்து வந்த அப்பா பிள்ளை என வழங்கும் சுவாமிநாத பிள்ளை அவர்களும் பெரும் புலவராகத் திகழ்ந்தார்கள். அவரைப்பற்றி வழங்கும் வரலாறுகள் பல உண்டு. உ. வே. சாமிநாத ஐயர் அவர்களை மிதிலைப்பட்டி முதலிய இடங்களுக்கு அழைத்துச் சென்றவர் இவரே ஆவார். ஐயர் அவர்கள் இவரால் இந்தப் பக்கத்தில் வழங்கிய பலவரலாறுகளை அறிந்து கொண்டார்கள்.

இதனை பலப்பட பாராட்டி தமது வரலாற்றில் எழுதி உள்ளார்கள்.

வெண்பாப்புலிக்கவிராயர் : இவ்வாதீன குருமூர்த்திகளால் பேணப்பெற்ற பெருங்கவிகள் பலர், சிலேடை நயத்தில் சிறந்தவர்கள். அவர்களில் வெண்பாப்புலிக் கவிராயரும் ஒருவர். அவருடன் இருந்தவர்கள் வேல்சாமி கவிராயர் ஆவார்கள். அவரும் சிலேடையில் சிறந்தவர். ஓர் நாள் ஆதீன குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்துவிட்டு, புலவர் வேல்சாமிக் கவிராயர் அவர்கள்தன் வீட்டிற்கு சென்றார்கள். அவ்வமயம் கவிராயர் வீட்டினுள் அமர்ந்திருந்தார். அவர் பெற்ற மழலை மகன் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். வெண்பாப்புலிக்கவிராயர் அவனிடம் 'உன் தந்தையிடம் புலி வந்திருப்பதாகச் சொல்லப்பா'' என்றார். உடனே கவிராயர், 'உள்ளே வேல் இருக்கிறது என்று கூறு' என்றாராம். இருவரும் மகிழ்ந்தனர். மேலும் சிலேடைப்புலி சுவாமிநாத ஐயர் என்பவரும் இவ்வாதீனத்தால் பெரிதும் பாராட்டப் பெற்றிருக்கிறார்கள்.

வீரப்பத்திரக்கவிராயர் : இக்கவிராயர் வெண்பா பாடுவதில் வல்லவர். இவ்வாதீனத்தில் வாழ்ந்த வேலாயுதத்தம்பிரானிடம் பயின்றவர். குன்றக்குடி குறவஞ்சியை இயற்றியவர். இதற்காக 'நாயகன் பிறப்பான்' என்னும் கிராமத்தை பரிசாகப் பெற்றவர். இப்புலவர் திருக்கோளக்குடியில் வீற்றிருக்கும் பெருமானுக்கு வாகனக்கவி முதலிய நூல்களை பாடி உள்ளார். இறுதிக்காலத்தில் இவ்வாதீனத்தம்பிரானாகவும் விளங்கினார்.

கணேச பண்டிதர்: இப்புலவர் இளையாற்றங்குடி புராணத்தைப் பாடியவர். திருவண்ணுமலை ஆதீன வித்துவானக திகழ்ந்தவர்கள். இத்தகைய புலவர்கள் பலர் நம் ஆதீனத்தைச் சிறப்பித்து இருக்கிருர்கள். இவர்கள் வரலாறுகள் எல்லாம் அருணை **ஆதீனபுலவர்கள்** என்னும் நூலாக நமது குருமகாசந்நிதானத்தினது கருணையினலே வெளிவர இருப்பதால் அந்நூலில் இப்புலவர்களது சிறப்பு அனைத்தும் கண்டு மகிழவேண்டுகிறேம்.

ஆதீனப் பனுவல்கள்

சிவஞான சித்தியார் சுபக்க உரை: இவ்வுரை நமது ஞானபிரகாச முனிவரால் இயற்றப்பெற்றது. இவ்வுரை சிவாக்கிரயோகிகள், மறைஞானதேசிகர் ஆகிய இரு உரையாசிரியர்கள் உரைக்கும் பிற்பட்டது, சிவஞான மாபாடியத்திற்கு முற்பட்டது இவ்வுரையே. இவ்வுரையில் எழுந்த சில கருத்துக்களையும், 'எடுத்து' என்னும் சொல்லுக்கு எழுந்த உரையையும் மறுத்து திருவாவடுதுறை ஆதீன சிவஞானமாமுனிவர் அவர்கள் சிவசமவாத கண்டம் என்னும் ஒரு மறுப்பு நூலை எழுதி அருளினர்கள். அம்மறுப்பிற்கு நமது ஆதீனச் சீடர்களில் ஒருவர், **வஜ்ஜிரத்தண்டம்** என்னும் பெயரிட்டு ஓர் மறுப்பு எழுதிச் சமாதானம் கூறினர். இது குறித்து 1875-ல் (யுவ ஆண்டு) வெளிவந்த சிவஞான சித்தியார் தத்துவ பிரகாசர் உரையை வெளியிட்ட கொன்றைமாநகரம் சண்முகசுந்தரம் முதலியார் அவர்கள் பின்வருமாறு கூறுகிருர்கள்: "மறுப்புகள் ஒவ்வோர் அபிமான வகையால் உண்டாயின அன்றி முதல்

நூல் கருத்திற்கும் உரைக்கும் ஞானபிரகாசர் உரை மிகவும் ஒத்தே இருக்கிறது''. இம்முதலியார் அவர்கள் எவ்வாதீனத்தையும் சாராதவர்கள். சித்தாந்த சாத்திரம் பதினுன்கினையும் பதிப்பித்து நாட்டிற்குத் தந்த சித்தாந்த சைவ பெரும் புலவராவார்கள்.

பெரியபுராண உரை: இவ்வாதீன ஆறுமுக தம்பிரான் சுவாமிகள், சேக்கிழார் செய்தருளிய தெய்வப்பனுவலாம், பெரிய புராணத்திற்கு சிறந்த பதவுரை தந்தருளினுர்கள். பெரிய புராணம் முழுவதும் உரையுடன் வெளியிட்ட பெருமை இவ்வாதீனத்தையே சா்ரும். இவ்வடியவரது வரலாறு முன்பே கூறி உள்ளோம். காசியாத்திரை மான்மியம் என்னும் நூலையும் இப்பெரியார் இயற்றி உள்ளார்கள். இந் நூலும் அச்சிடப்பட்டுள்ளது.

ஸ்ரீமத் தெய்வசிகாமணி தோத்திரபனுவல்கள்: மற்றும் ஆதீன அடியவர்களால் தெய்வ சிகாமணி நான்மணி மாலை, சிற்குருபதிகம் அருணசலதேசிக மாலை முதலிய நூல்கள் இயற்றப்பெற்றுள்ளன.

வடமொழி நூல்கள்: எவ்வாதீனத்தையும்விட இவ்வாதீனத்தில் பல வடமொழி நூல்கள் வெளி வந்துள்ளன. சிவஞான போதத்திற்குச் சிறந்த வியாக்கியானமும், பௌஷ்கர ஆகமத்திற்கு சிறந்த விருத்தியும் ஞானபிரகாச முனிவர் அவர்கள் செய்துள்ளார்கள். மேலும் ஆதீனத்தைச் சேர்ந்த வடமொழி, ஆகம பிரமாண நூல்கள் பின்வருமாறு:—

1. சித்தாந்த சிகாமணி.
2. பிரமாண தீபிகை.

3. பிராசாத தீபிகை.
4. அஞ்ஞான விவேசனம்.
5. சிவயோக சாரம்.
6. சிவயோக ரத்னம்.
7. சிவாகமாதி மகான்மியசங்கிரகம்.

அடிகளார் அருளாட்சி

ஆதீனத்தின் 45-வது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளி இருந்து அருட்செங்கோல் செலுத்தி வருபவர்கள் திருப்பெருந் திரு தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆவார்கள். இவ்வருட் குரு மூர்த்தியை தமிழ்நாட்டு மக்களெல்லாம் ஏன், இந்தோசீன, மலேயா ஈழநாட்டு மக்களெல்லாம் குன்றக்குடி அடிகளார் என அழைத்து மகிழ்கின்றனர். அடிகளார் காலத்தில்தான் நமது ஆதீன மடம் தமிழ் நாட்டுமக்கள் அனைவரும், அயல் நாட்டுமக்களும் பாராட்டிக் கூறும் பெரும் பெருமையை யடைந்தது என்ருல் மிகையாது.

அடிகளாரது சொற்பெருக்கை கேளாத மக்கள் தமிழ் நாட்டில் இல்லை என்று கூடச் சொல்லி விடலாம். அவர்கள் தலைமை பூணுத சபைகள் இல்லை. அரசியல் மேடைகளும் இல்லை. அவர்கள் செல்லாத கல்லூரிகள் இல்லை. அவர்கள் உரையைக் கேளாத உயர்நிலைப் பள்ளிகள் கூட இல்லை என்று சொல்லிவிடலாம். இவ்வாறு இரவும் பகலும் ஊர் ஊராகச்சென்று பணிபுரியும் அடிகளாருக்கு ஆதீன நிர்வாகத்தை கவனிக்க இயலுமா என ஐயம் எழலாம். ஆனல் ஆதீன நிர்வாகத்திலும் அடிகளாரது ஆட்சியில் பல புதுமைகளைக் கண்டு அகமகிழ்கின்ருேம்.

ஆட்சித்திறன்

முந்திய குரு மகா சந்நிதானங்கள் எல்லாம் மடாலயத்திலேயே இருந்து நல்லாட்சி புரிந்தவர்கள். அவர்கட்கு ஆதீன சொத்துக்கள் அனைத்தும் நேரே காணுகின்ற வாய்ப்பு இல்லை. ஆனால் நமது அடிகளாரோ சென்னையிலிருந்து குமரியை அடுத்துள்ள சுசீந்திரம் வரையிலுள்ள மடாலயச் சொத்துக்களை நேரே சென்று கண்காணிக்கின்றார்கள். அவர்கள் உந்துவண்டியில் திடீரெனச்சென்று பார்வையிடுவதால் அலுவலர்கள் அனைவரும் தனது பணிகளை செவ்வனே செய்து முடிக்கிறார்கள். ஆதீன வருமானமும் இவர்கள் காலத்தில் பெருகிக்கொண்டே வருகின்றது. நிர்வாக அலுவலர்களையும் தனது குடி மக்களையும் குத்தகைதாரர்களையும் நேரே அழைத்து அவர்களது குறை நிறைவுகளையும் கேட்டு ஆவனசெய்வதால் இவர்களது ஆட்சியில் குறை என்பதற்கு இடமில்லை. இவர்களது ஆட்சியில் செய்துள்ள பணிகளை காண்போம்.

மடாலயத்தில்

அடிகளார் இளவரசாக எழுந்தருளி இருந்தபோதே மடாலயத் திருமதிலை உயர்த்திக்கட்டி அருளினார்கள். அப்பணியானது மடாலய உயர்வை எடுத்துக்காட்டும் அறிகுறியாக முதன் முதலில் அமைந்தது எனலாம். மடாலயத்தையும் கூடிய வரையில் செப்பனிட்டு வந்திருக்கிறார்கள். திருமட முகப்பில் சிவபோக சாரம் முதலிய அருள் நூல்களிலிருந்து பொன்மொழிகளை எடுத்து எழுதச் செய்திருக்கிறார்கள்.

குன்றக்குடிக் குமரன்

அடிகளார் ஆட்சியில் குமரனுக்கு பல விழாக்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு, சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. ஆடிக்கிருத்திகையில் திருப்படித்திருநாள் சிறப்புடன் நடத்தி, திருத்தேரில் முருகனை உலா வரச் செய்கின்றார்கள்.

கிருத்திகை சோமவாரத்தில் சங்காபிஷேகம் இவர்கள் காலத்திலேயே துவங்கப்பட்டுச் சிறப்பாக நடந்தேறி வருகிறது. திருக்கிருத்திகை அன்று முருகனுக்குச் சந்தணக்குழம்பு சாத்தப்படுகிறது. விசாக நாளில் முருகன், மடாலயத்திற்கு எழுந்தருளும்போது அடிகளார் ஆராதனைப் பொருள்களுடனும், அன்பர்களுடனும் எதிர்சென்று அழைக்கும் காட்சி எல்லோர் மனதையும் கவரும் தன்மைவாய்ந்ததாகும். அடிகளார் முருகனை அழுது அழுது அரற்றி வழிபடும் காட்சி கல்நெஞ்சமும் கனிந்து உருகச் செய்யும்.

மேலும் இவர்கள் ஆட்சியில் சிறந்த ஓதுவாமூர்த்திகளைக்கொண்டு, தேவாரத் திருப்புகழ் பாராயணம் சிறப்புற நடத்தி வருகிறார்கள். தேவாரபாடசாலை ஒன்று அமைத்து தக்க ஆசிரியரைக்கொண்டு இளஞ்சிறுருக்கு தேவாரத் திருப்பாடல்கள் நன் முறையில் போதிக்கப்பட்டு வருகின்றன.

முருகனை அருச்சிக்கும் ஆதிசைவ மரபில் வந்த குழந்தைகள் ஆகம அறிவுபெறும் பொருட்டு ஆகமபாடசாலை தக்க ஆசிரியரைக்கொண்டு சிறப்புற நடத்தப் பெற்று வருகிறது.

திருப்பத்தூர் திருத்தளி

இவ்வாலயம் அடிகளாரது ஆட்சியில் நன்முறையில் திருப்பணி செய்யப்பெற்று வருகிறது. குடமுழுக்கு விழாவும் அண்மையில் நடக்க இருக்கிறது. இறைவனின் விசாக விழா ஆண்டுதோறும் சிறப்புடன் நடத்தப்பெற்று வருகின்றது. அவ்விழாவில் திருமுறைவிழாச் சிறப்புடன் நிகழ்த்தப்பெறுகிறது. பிரான்மலையிலிருந்து நால்வர் பெருமக்களது திருவுருவங்களை எழுந்தருளச்செய்து திருப்புத்தூர் திருக்கோயிலில் அமைந்துள்ள அநபாயசோழன் காவணத்தில் வீற்றிருக்கச் செய்கின்றார்கள். அப்பெரும் குரவர்கள் முன்னிலையில் தெய்வசிகாமணி அரங்கில் நாள்தோறும்

அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. திருமுறைகளைப் பற்றியும் சிறப்பு வழி பாட்டுத்தன்மையையும் விளக்கி பல சைவப்பெரியார்கள்பேசி, மக்கள் மனத்தில் ஆழப்பதிய வைக்கின்றூர்கள். இசை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடந்து, மக்கள் செவி, உள்ளம் இரண்டிற்கும் இன்பத்தை தருகின்றன.

மேலும் திருமுறைத் திருக்கோவில் திருமுறைக் கல்வெட்டுக்கள் முதலிய சிறப்புடன் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இவ்வாலயச் சிறப்பு கண்டோரை எல்லாம் களிப்படையச் செய்கின்றன.

பிரான்மலையில் :

அடிகளார் ஆட்சிக் காலத்தில் கொடுங்குன்ற நாதரது ஆலயம் திருப்பணி செய்யப்பெற்று குடமுழுக்குவிழா சிறந்த முறையில் நடைபெற்றது. ஆலயத்தில் மின் விளக்குகள் அமைக்கப்பெற்றன. இவ்வூர் வள்ளல் பாரி ஆண்ட பழம்பேரூர் ஆதலால் அடிகளார் ஆட்சிக் காலத்தில் பாரிவிழா சிறப்புடன் நடைபெறுகிறது. வள்ளல் பாரியை வாழ்த்தும் விழா தமிழகத்திலேயே அடிகளார் ஒருவரால்தான் கொண்டாடப்பெறுகிறது. கொடை வள்ளலின் பெருமையை ஞானவள்ளலாராகிய அடிகளாரால் தான் அறியமுடியும். பிரான்மலையிலுள்ள தோப்புகள், சிறந்தமுறையில் வளமாக்கப்பட்டு பிறரால் மரங்கள் வெட்டப்படாமல் தடுப்பதற்காக மரங்களில் எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்செயல் ஒன்றே அடிகளாரின் நிர்வாக அறிவை நன்குப் புலப்படுத்தும். இவ்வூருக்கு அருகிலுள்ள பள்ளப்பட்டி கிராமத்திலுள்ள கட்டளை மடம் அடிகளார் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

சதுர்வேதிமங்கலத்தில் :

மாசி மகவிழா அடிகளாரே நேரில் இருந்து, சிறப்புற நடத்தி வைக்கின்றூர்கள். ஆலயத் திருப்பணிகளும் பல

நடைபெற்று வருகின்றன. இறைவிக்கு சந்தனக்காப்பு அடுத்தடுத்துச்செய்து அகமகிழ்வு கொள்கிருர்கள்.

திருக்கோளக்குடியில் :

நமது குருமூர்த்திகள் இளவரசாக இருக்கும்போதே இங்குள்ள இறைவன் ஆலயத்திற்கும் மின் விளக்கு வசதிகள் ஏற்பாடுசெய்தருளினுர்கள். இவ்வாலயத் திருப்பணிகளும், விழாக்களும் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

தேனுட்சி அம்மன் கோவில் :

இவ்வம்மன் ஆலயமும் அடிகளார் காலத்தில் பலவகையில் திருப்பணி செய்யப்பெற்றன. குரு மூர்த்தி அவர்களும் இவ்வாலயத்திற்கு எழுந்தருளி வழிபட்டு ஆவனசெய்து வருகிருர்கள்.

ஐந்துகோவில் நிர்வாகம் :

மேற்கூறியவாறு ஆதீனத்திற்குரிய ஐந்து திருக்கோயில்களும் அடிகளார் காலத்தில் மிகுந்த சிறப்புற்று இருக்கின்றன. திருமுறை ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆலயத்திற்கும் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். அடிகளார் அவர்கள் அடுத்தடுத்து அவ்வாலயங்களுக்குச் செல்வதால் அவ்வாலயமும் சுத்தமாக வைக்கப்பட்டு நித்திய சிறப்பு விழாக்கள் சிறப்புடன் நடைபெறுகின்றன.

நமது தலே நகரில் :

சென்னையம்பதியிலுள்ள கட்டளைமடத்தின் பல பகுதிகள் பழுதடைந்திருந்தன. அதனை கட்டத் திருவுளம் கொண்ட குருநாதர் அவர்கள் பெரும் பொருட் செலவில் அம்மடத்தின் பிற்பகுதியையும் சேர்த்து அழகிய வேலேப்பாடு அமைந்த கட்டிடமாக கட்டி அருளினுர்கள். அ. ச. ஞானசம்பந்தம், M. A., அவர்கள், கலைமகள் ஆசிரியர், கி. வா. ஜகந்நாதன் அவர்கள், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆகிய தமிழ்

அறிஞர்களை கொண்டு பெரிய புராணச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெற்றுவந்தன. இத்திருமடத்தில்தான் தமிழகத்தின் தந்தை திரு. வி. க. அவர்கள் நமது குருநாதரால் பொன்னுடை போர்த்து பாராட்டப் பெற்றார்கள். அடிகளார் காலத்தில் பழைய சொத்துக்களும் மீட்கப்பட்டன.

திருவண்ணமலையில் :

நமது ஆதீனப்பெருங் குரவராகிய தெய்வசிகாமணி ஆலயம் இங்கு இருக்கிறது. அடிகளார் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற உடனேயே இத்திருக்கோவில் புதுப்பிக்கப்பெற்று குடமுழுக்கு விழாச்சிறப்புறச் செய்யப்பெற்றது. வழிபாடு முதலிய சிறப்புகள் தொடர்ந்து நடைபெற்றுவர ஆவன செய்தருளி வருகிறார்கள்.

கும்பகோணத்தில் :

இங்குள்ள கட்டளை மடத்தை தலைமையாகக்கொண்டு திருக்கண்ணமங்கை, சாக்கோட்டை, முதலிய இடங்களிலுள்ள நிலங்கள் நன்கு கவனிக்கப்பட்டு வருகின்றன. சிதம்பரம், சீர்காழி, திருவிடைமருதூர், முதலிய இடங்களிலுள்ள சொத்துக்கள் இக்கிளை மடத்திலுள்ள அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. குருமகாசந்நிதானம் அவர்கள் அடுத்தடுத்து இங்கு எழுந்தருளி ஆதீனத்தாரால் கைவிடப்பட்ட சொத்துக்களை கைப்பற்றி இருக்கிறார்கள். அவற்றுள் சிறப்பாக திருப்பூந்துருத்தி ஸ்ரீமத் அனந்த பத்மநாப தீர்த்த நாராயண சுவாமிகள்மடம் அதற்குரிய தோப்புகள், நிலங்கள் முதலிய சொத்துக்கள் மீண்டும் ஆதீனப்பார்வைக்குச் சேர்க்கப்பட்டு குருபூஜை விழா முதலியவை சிறப்புற நடைபெற்று வருகிறது என்பதைக் குறிப்பிடலாம். மேலும் விருத்தாசலத்திலுள்ள விருத்தகிரி நாதருக்கு அர்த்தசாம கட்டளைக்குரிய சொத்துகள் முதலியன ஆதீனத்தின் பார்வைக்கு மீண்டும் வரபெற்று சிறப்புற அவ் அறம் நடைபெறுவதை அறிந்துபாராட்டாதார்

இல்லை என்றே கூறலாம். மேலும் குருமகாசந்நிதானம் அவர்கள் இக்கட்டளை மடத்தை தன் ஆட்சியில் செப்பனிட்டு இருக்கிறுர்கள். இப்பொழுதும், திருப்பணி நடைபெற்று வருகிறது. கும்பேசர் ஆலயத்தின் திருமுன்பு "நன்மைபெருகு அருள்நெறியே" எனத்துவங்கும் சேக்கிழாரது திருப்பாடலை கல்வெட்டில் எழுதச்செய்து பதித்தருளியிருக்கிறுர்கள். திருநல்லூரிலும் அமர்நீதி நாயனுர்விழா சிறப்புடன் கொண்டாடி அடியார்களுக்கு ஆடைகொடுத்து அருளினுர்கள். குடந்தையில் வாழ்ந்த சிவநேயச்செல்வர் குப்புசாமிபிள்ளை அவர்களைக்கொண்டு விநயகர் ஆலயம் எடுப்பித்தார்கள். அத்தொண்டினைப் பாராட்டி அப்பெருமகனுருக்கு பொன்னுடை போர்த்தி மகிழ்ந்தார்கள். இங்குநடைபெறும் குடந்தைச்சிவனடியார் திருக்கூட்ட ஆண்டுவிழாக்களில் தொடர்ந்து 4, 5 ஆண்டுகள் தலைமை வகித்தருளினுர்கள். அடியார்களுக்கு அன்னம் இட்டுஅருளினுர்கள். சைவர்கள் மகாநாடு ஒன்று சிறப்புற நடத்திவைத்தார்கள். ஆதீனத்திற்குரிய மனைகள் இருக்கும் திருவண்ணுமலை மடத்துதெருவிலுள்ள நகராட்சி உயர்நிலைப்பள்ளிக்கு ஆதீனச்செலவில் ஒலிபரப்பும் கருவிகளைவாங்கி உபகரித்தருளினுர்கள். கட்டளைமடத்தின் மேற்பார்வையாளராக திரு. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களை நியமித்து ஆவன செய்து வருகிறுர்கள்.

மதுரையம்பதியில் :

தெற்காவணி மூல வீதியிலுள்ள திருமடம் சில நாட்களாக சிதைந்துகிடந்தது. அத்திருமடத்தை நல்ல முறையில் புதுப்பித்து கட்டிஇருக்கிறுர்கள். மாடி நன்முறையில் எழுப்பப்பட்டிருக்கிறது. இப்பகுதியிலுள்ள மனைகளின் மூலம்வருமானம் அதிகப்பட்டிருக்கிறது. திருப்பரங்குன்றத்திலுள்ள மனைகளும் மீட்கப்பட்டிருக்கின்றன. பல கல்லூரி மாணவர்களுக்கு கட்டளை மடத்திலிருந்து நன்முறையில் ஆதரவு தரப்படுகிறது. குருமகாசந்நிதானம் அவர்கள் இக்கட்டளை மடத்தில் எழுந்தருளி

மதுரையம்பதியில் பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். சொக்கநாதர் ஆலயத்தின் திருமுன்பு 'ஆலமே அமுதமாக' எனத்துவங்கும் சேக்கிழார் பெருமானது திருவாக்கை, கல்வெட்டாக பதிப்பித்தருளியிருக்கிறார்கள். நன்மை தருவார் திருக்குளத்தைத்தானே மண்வெட்டித்தாங்கி தூர்வை எடுக்கத் துவங்கினார்கள். அது கண்ட அன்பர்கள் அனைவரும் குருமகாசந்நிதானம் அவர்களின் திருத் தொண்டினைப்பாராட்டி இத்திருப்பணியில் கலந்து அத் திருக்குளத்தின் தூர்வையை எடுத்து மகிழ்ந்தார்கள். அப்பரடிகளின் மறுபிறப்பே, குன்றக்குடி அடிகள் எனப் பாராட்டி மகிழ்ந்தார்கள். அவ்வாலயத்தில் கூட்டுவழிபாடும் சிறப்புற நடக்க ஆவனசெய்தருளினார்கள். திருவள்ளுவர் கழகத்திற்கும் அவ்வப்பொழுது ஆதரவுகாட்டி வருகிறார்கள். இக்கட்டளை மடத்தில் அலுவலாற்றும் திரு. சங்கரகுமாரக்குருக்கள் அவர்கள் அடிகளாரின் திருவடியே பற்றுக்கோடாக உடையவர்கள். ஆதீன முன்னேற்றத்தில் கண்ணும்கருத்தும் அமைந்தவர்கள். உலகியல் அறிவும், சமய நூல் அறிவும் மிகுந்தவர்கள். அவர்கள் தனதுமுயற்சியினால் மடத்தின் மாடியை எழுப்பி, நமது அடிகளாரை நமக்குத்தந்த ஆறுமுகதேசிககுருமூர்த்தியின் திருப்பெயரை அதற்கிட ஆவனசெய்துவருகிறார்கள். இக்கட்டளை மடத்தின் சொத்துக்களை மீட்பதற்கு ஆறுமுக தேசிக குருமகாசந்நிதானம் அவர்கள் மாணிக்கத்தம்பிரான் சுவாமிகள் என்னும் திருப்பெயரோடு இருந்த பொழுது செய்த தியாகங்கள் மிகப்பலவாம்.

திருநெல்வேலியில் :

திருநெல்வேலி, சுசீந்திரம் முதலிய இடங்களிலுள்ள நம் ஆதீன மடாலயச் சொத்துகள் நன்கு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. குருமகாசந்நிதானம் அவர்கள் அச்சொத்துக்களை பார்வையிட்டு அருளச் செல்லுங்கால் ஆழ்வார் திருநகரி, ஸ்ரீ வைகுண்டம், போன்ற இடங்களில் அமைந்துள்ள திருக்கோயில்களிலுள்ள திருக்குளங்களை

தூர்வை எடுத்து மகிழ்ந்தார்கள். சமயப்பேருரை பல ஆற்றி வருகிறார்கள். இவ்வாறு குரு மகா சந்நிதானம் அவர்கள் ஆதீன அருளாட்சியைச் சிறப்புடன் நடத்தி வருகிறார்கள். இனி அவர்களுக்கே உரிய தமிழ்ப்பணி, சமயப்பணி, கல்விப் பணி, சமுதாயப்பணி ஆகிய இவைகளை தனித்தனியே கண்டு மகிழ்வோம்.

தமிழ்ப் புலவர்களுக்குப் பாராட்டு :

அடிகளாரது அருளாட்சியில் தமிழ்த் தந்தை திரு.வி.க. அவர்கள் பண்டிதமணி, மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், பெருஞ்சொல் விளக்கனார் சரவண முதலியார் அவர்கள், நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் ஆகிய முது பெரும் புலவர்கட்கு பொன்னாடை அணிவித்து, பாராட்டு விழா நிகழ்த்தி நல்லாசி கூறி மகிழ்ந்தார்கள். பெண்ணின் பெருமையைப் பேணி வளர்த்த திரு. வி. க. அவர்களது திருப்பெயரால் மகளிர் விடுதி ஒன்று குன்றக்குடியில் அமைத்து அதன் மூலம் திரு. வி. க. அவர்களின் புகழ் நிலை பெற ஆவன செய்தருளினார்கள்.

அருள் நெறித் திருக்கூட்டம் :

தமிழகத்திலேயே முதன் முதலாக அருள் நெறித் திருக் கூட்டம் அமைத்த பெருமை நமது குருமகா சந்நிதானம் அவர்களையே சேரும். அகில உலகமும் இன்று இருளில் ஆழ்ந்து கிடப்பதை உணர்ந்தார்கள். அதற்குத் தனி மனிதனே காரணம் என்று கூற இயலாது; சமுதாயமே அதற்குப் பொறுப்பு என்று தெளிந்தார்கள். ஆகவே திருக் கோயில்களில் கூட்டுவழிபாட்டு இயக்கத்தை தோற்று வித்தார்கள். அருள்நெறி அன்பர்களும் மற்றைய சைவப் பெருமக்களும் இக்கூட்டு வழிபாட்டில் கலந்துகொண்டார் கள். அடியார்கள் பலரும் சேர்ந்து அருள் நெறிப் பணி புரிய முன் வந்து குருநாதர் அவர்களின் அருள் பெற்றார் கள். அத்திருக் கூட்டத்திற்கு அருள் நெறித் திருக்கூட்டம் என்னும் பெயரை வழங்கி அருளினார்கள்.

அதன் நிரந்தரத் தலைவராகத் தானே எழுந்தருளினுர்கள். நாட்டிலுள்ள பட்டித்தொட்டி எல்லாம் அருள் நெறித் திருக்கூட்டங்களை அமைத்துக்கூட்டுவழிபாடு செய்வித்தருளினர். தமிழகத்தின் அருள்நெறித்திருக்கூட்டத்தின் காரணமாக நாத்திகத்தின் நாடிதளர்ந்தது. மக்கள் உள்ளத்தில் புது மலர்ச்சி பூத்தது. குருநாதர் அவர்கள் கொளுத்திய அறிவொளியும், அருளொளியும் தென்னக முழுவதும் பரவிற்று. எங்கும் அருள்நெறி! எங்கும்அன்புமயம்! எங்கும் திருக்கூட்டம்! எங்கும் கூட்டுவழிபாடு! செய்தித்தாள்கள் சிறப்புடன் எழுதின. இங்ஙனம் அருள் நெறித் தொண்டு புரிந்துவரும், அருள்நெறித் தந்தையை குன்றக்குடி அடிகளெனக் குவலயம் போற்றிக் கொண்டாடுகிறது. அத்திருக் கூட்டக்கிளை அமைப்புகளில் ஈரோடு, திருப்பூர், திருச்சிராப் பள்ளி, உத்தரகோச மங்கை ஆகிய இடங்களிலுள்ள திருக் கூட்டங்கள் தமிழ்நாட்டிலுள்ள திருத்தலங்கள்தோறும் வழிபட்டுக் கூட்டுவழிபாடு முதலிய நடத்தி சமயப்பணி புரிந்து வருகின்றன.

திருவாசக விழா :

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்ற உண்மையினை வாழ்வில் மெய்ப்பிக்க விரும்பிய நமது குருநாதர் அவர்கள் மணிவாசகர் பெருமையை மக்கள் உணர வழி செய்தார்கள். திருச்சி, மதுரை, திருப்புத்தூர் போன்ற திருத்தலங்களில் திருவாசக விழா எடுத்தருளுகின்ருர்கள். திருவாசகப்பெருமையை எடுத்து இயம்ப அறிஞர் பெருமக்கள் வருகின்றனர். அக்கருத்துரைகளையும் அடிகளார் அவர்களது வாழ்த்துரைகளையும் கேட்க ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். கேட்கின்றனர். கேட்டு உணர்கின்றனர். விழாக்களின் இறுதியில் குருநாதர் அவர்கள் வழங்கிவரும் வாழ்த்துரைகளை கேட்பதற்கென்றே பெருமக்கள் பலர்கூடி மணிவாசகத்தேனைப் பருகி, பேரானந்தம் அடைகின்றனர். சென்ற ஆண்டில் திருச்சியில் நிகழ்ந்த திருவாசக விழாவில் திருவாசக ஆய்வுக்கட்டுரைகள் 25

அடங்கிய திருவாசக மலரை வெளியிட்டருளினுர்கள். அம் மலரைக் கண்டு தெளிவோர் திருவாசக நுண்பொருளை அறிந்து உணர்வார்கள் என்பது திண்ணம். இம்மலரை அடிகளார் ஆணையைக் கொண்டு திருச்சி அருள் நெறிக் கூட்டத்தின்சார்பில் செயலர், அடிகளார் அடிமறவாத் தொண்டர், வழிபாட்டுக் கூட்டத்தை நன்முறையில் நடத்தி வரும் சிவ பூஜைச் செல்வர் சொ. கிருஷ்ணன் அவர்கள் பெரு முயற்சி செய்து வெளியிட்டுள்ளனர். இத்தகைய தொண்டர்களுக்கு எல்லாம் தலைவராம் அடிகளார் அவர்கள் திருப்பத்தூரில் திருவாசகத்தைக் கொண்டே வேள்வியும் செய்து மகிழ்ந்தார்கள்.

அருள்நெறித் திருப்பணி மன்றம்:

மாற்றுச் சமயத்தார் நாட்டில் உலவி வருவதையும் நமது சமயத்தாரை மாற்றி வருவதையும் கண்டு தவத்திரு அடிகளார் அவர்கள் மனம் நொந்தார்கள். மாற்றுச்சமயத் தாரின் ஆயுதமாக பயன்பட்டதெல்லாம் அவருடைய கல்வி நிலையங்களும் மருத்துவ விடுதிகளும்தான் என்பதை உணர்ந்தார்கள் அருள்நெறித்தந்தை. அந்த எண்ணத் தின் எழுச்சியால் அருள் நெறித்திருப்பணி மன்றம் மலர்ந் தது. அம்மன்றத்தின் துணைகொண்டு சமுதாயத்தோடு நன்கு தொடர்பு கொள்வதற்காகத் திருப்பணி மன்றத்தின் தலைமைப் பொறுப்பையும் தானே ஏற்றருளினுர்கள். மக்களோடு மக்களாக இருந்தருளி கருணைபாலித்து வருகிறுர்கள்.

கல்வித் திருப்பணிகள்:

பல இடங்களுக்கு இளைஞர்களை அனுப்பி கல்வி பயில உதவுவதைவிட, தாமே கண்காணிக்கும் பள்ளிகளை குன்றக் குடியில் நிறுவ, முடிவுசெய்தார்கள். அதன் எழுச்சியால் குன்றக்குடியில் தெய்வசிகாமணி அருள்நெறி உயர் துவக் கப்பள்ளி துவங்கிற்று. அங்கு நூற்றுக்கணக்கான இளஞ் சிறுர்களும் சிறுமிகளும் வந்து கல்விகற்று பயன் அடை கின்றனர்.

புண்ணிய விடுதிகள் :

திக்கற்ற குழந்தைகள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி ஏங்கி ஏங்கி, ஊர் ஊராக சுற்றி வருவதைக் கண்டார்கள் நமது குரு முனிவர் பெருந்தகை. அத்திக்கற்ற குழந்தைகளுக்கு உதவியாக திருவாதவூரர் புண்ணிய விடுதி, திரு வி. க. புண்ணிய விடுதி ஆகியவற்றை ஏற்படுத்தி அருளினர்கள். அக்குழந்தைகளைப் பராமரிக்க ஒரு வயதான மூதாட்டியையும் நியமித்து இருக்கிறார்கள். அடுத்தடுத்து அக்குழந்தைகளின் நலங்களை நன்கு கவனித்து வருகிறார்கள்.

ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி :

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்லமாதவம் செய்திட வேண்டும் அம்மா' எனப்பாடினார்கள் கவிமணி அவர்கள். 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்தநாட்டிலே' என்று பாடினர் பாரதியார். ஆகவே எதிர்காலச் சிவநெறிச் செல்வங்களை உலகுக்கு வழங்க காத்திருக்கும் தாய்க்குலத்திற்கு ஒரு ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி துவங்கினார்கள். அப்பயிற்சிப்பள்ளிக்கு ஸ்ரீ முருகன் அருள்நெறி ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி எனப்பெயரிட்டார்கள். அப்பள்ளியால் அருள்நெறி வளர்க்கும் ஆசிரியைகள் தமிழ் நாட்டில் பெருகிவருகிறார்கள்.

அடிகளார் உயர்நிலைப்பள்ளி :

உயர் துவக்கப்பள்ளி ஓங்கி வளர்ந்தது. பல மாணவர்கள் படித்து 8-ம் வகுப்புத்தேறியதும் வெளியூர் சென்று வேதனைப்பட்டனர். அதுகண்டு அருள்நெறித் தந்தையார் நெஞ்சம் வருந்தியது. அடிகளார் உயர்நிலைப்பள்ளி துவங்கப்பெற்றது. IV, V, VI படிவங்களில் மாணவர்கள் பயின்று வருகிறார்கள். மாணவர்கள் தங்கிவாழ அருள் நெறிச் சபாபதி முனிவர் மாணவர் இல்லமும், மாணவிகள் தங்குவதற்கு மங்கயற்கரசியார் மகளிர் இல்லமும் தோற்றுவிக்கப்பெற்று செவ்வனே நடைபெற்று வருகின்றன.

ஈழத்தில் அருள்நெறி முனிவர் :

தென்னாட்டில் திருவருள் ஆட்சியும், அருள்நெறியும் தழைத்தோங்குதலைக் கண்ட ஈழத்துப் பெரு மக்கள் தவத் திரு அடிகளார் அவர்களை ஈழத்திற்கு எழுந்தருள அடி பணிந்து அழைத்தார்கள். அதற்கிணங்கிய அருள்நெறித் தந்தை அவர்கள் இலங்கைச் செலவை பலமுறை மேற் கொண்டு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங் களுக்கெல்லாம் சென்று அருள்நெறி பரப்பி வருகிறார்கள். அங்கு சிவநெறிச் செல்வர்களும், இளைஞர்களும் அருள் முனிவரின் சொல்லோவியத்தையும், செயல்த் திறத்தையும் கேட்டு கண்டு மட்டிலா மகிழ்ச்சி பூத்தவண்ணம் இருக்கிறார் கள். அருள் நெறித் திருக்கூட்டம் இங்கும் துவக்கப்பெற்று அருள் நெறிப் பணிகள் சிறந்து நடைபெற்று வருகின்றன.

மலேயாவில் மாமுனிவர் :

நமது குருமூர்த்தி அவர்கள் கீழ்த்திசை நாடுகளாக உள்ள மலேயா, சயாம், இந்தோனேஷியா போன்ற இடங் களுக்கும் சென்று சிவநெறிச் செல்வத்தை வாரி வாரி அந் நாட்டு மக்களுக்கு எல்லாம் வழங்கினார்கள். 28—12—54 முதல் 27—3—55 முடிய அந்நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார்கள். அங்கு பாழடைந்த திருக்கோயில்களின் நிலை கண்டு உருகினார்கள். அத்திருப்பணியில் ஈடுபட்டு தானே கல் தூக்கி, காரை சேர்த்து தொண்டாற்றினார்கள். மாமுனி வரது செயல்த் திறன் கண்டு மக்கள் எல்லாம் பாராட்டினார் கள். மலேயா, பல்கலைக் கழக நூல் நிலையத்திற்கு பொருள் உதவி புரிந்தார்கள். அருள் நெறித் திருக்கூட்டம் அங்கு ஏற்படுத்தி அருளினார்கள். அத்திருக்கூட்டம் சிறப்புறச் செம்மையான தொண்டுகளை இப்போதும் செய்துவருகிறது. அருள்நெறிப் பதிப்பகம் நிறுவி, அதற்காக ஆயிரத்தொரு டாலர் உதவிபுரிந்தருளினார்கள்.

திருக்கைலைச் செலவு :

தென்னகம் முழுவதும் நாள்தோறும் சென்று திருத் தலங்களை தரிசித்து வருகிறார்கள். திருக்கைலாய பரம்பரை

யில் வந்த தவத்திரு அடிகளார் சென்ற ஆண்டு திருக்கைலாயநாதனைத் தரிசிக்க விழைந்தார்கள். செல்லும் வழி எல்லாம் மக்கள் சிறப்பித்து வழிபட்டனர். பம்பாய் சென்றதும் பக்தர் கூட்டம் பல மேடைகளில் எழுந்தருளிய அடிகளாரை வாழ்த்தி வணங்கினார்கள். பின்னர் எல்லோரா, அஜந்தா, உஜ்ஜயினி, ஜெயப்பூர் வழியே டில்லி சென்றடைந்தார்கள். டில்லியில் டாக்டர் ராதாகிருஷ்ணன் போன்ற பேரறிஞர்களும், வானொலி நிலையத்தாரும் நன்கு வரவேற்று மகிழ்ந்தார்கள். பல மேடைகளில் அருள்நெறி முழக்கம் செய்தார்கள். மீண்டும் யாத்திரையை துடங்குகையில் குளிரும், மழையும் நிறைந்திருந்தமையால் அரசியலார் கைலை யாத்திரையை மாற்றிக்கொள்ளுமாறு வேண்டினர். குன்றக்குடிக்குமரனுக்கு பங்குனி உத்திர விழா நிகழத் துவங்கினமையால் முருகனைக் காண குன்றக்குடிக்கு விரைந்து திரும்பி வந்தார்கள்.

திருமுறை போற்றும் பெரு முனிவர் :

அடிகளார் அவர்கள் திருமுறைகளைத் தினமும் கேட்டுக் கேட்டு மனங்கசிந்து அழுது அரற்றும் காட்சி கல்மனமுடையோரையும் கனிவிக்கச் செய்யும். "அத்திருமுறைகளால் இறைவனுக்கு அர்ச்சனை புரியும் நாளே நந்நாள் என்பது அடிகளார் திருவுள்ளம், "அர்ச்சனை பாட்டே ஆகும், ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுகென்றார்"? யார் தெரியுமா? தூமறை பாடும் வாயாராகிய சிவபெருமான். அத்தகைய பெருமானது கட்டளைக்கிணங்க திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள் அர்ச்சனைக்கு உரியதல்ல எனக் கூறுவது இறைவன் திருவுள்ளத்தை மறுப்பதாகும் என அடிகளார் கருதினர். ஆகவே தமிழ் அர்ச்சனை இயக்கத்தை தமிழ் நாட்டில் தோற்றுவித்தனர். இத்தகைய அடிகளாரது தமிழ்த்தொண்டு அருள்நெறித் தொண்டர்களால் தமிழகத்தில் நன்கு விளக்கம் பெறுகின்றன.

அரசியல் போற்றும் அருளியல் :

அரசியலில் உள்ளோர் அருளியலைச் சிந்திப்பதில்லை. அதனோடு வெறுக்கவும் தொடங்கினர். இதனைக்கண்டார்

அருளியல் முனிவராம் அடிகளார். அரசியலில் உள்ளவர்களையும் அழைத்து அவர்களுக்கு அருள் நெறி புகட்டினுர். அருள் நெறித்தொண்டையும் அடிகளாரது பண்பையும் கண்ட பல்வேறு அரசியல் கட்சியினரும் அடிகளாரது கருத்தைச் சிந்திக்கத்தொடங்கினர். பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் மடாலயத்திற்கு வந்து ஆதீன மரபுக்கெல்லாம் உட்பட்டு அடிகளாருடன் கலந்து அகமகிழ்ந்து செல்கின்றனர்.

சமயநெறிக்கு மாறுபட்ட கட்சி தலைவராம், பெரியார் ஈ. வே. ரா. போன்றவர்களும் அடிகளாரைத் தரிசித்து அருள் உரைகேட்டு மகிழ்கின்றனர் என்ருல் அடிகளாரது பண்பினை முழுவதும் எடுத்துரைக்க நம்மால் இயலுமா!

இளவரசுப் பட்டம்:

குருமகாசந்நிதானம் அவர்கள் 30 ஆண்டுகளாக இவ்வாதீனத்தில் இருந்து வரும் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகட்கு இளவரசுப் பட்டம் அளித்து நடராஜ தேசிக குருமூர்த்திகள் எனத்திருநாமம் சாத்தினுர்கள். இப்பெரியார் தூய்மையானஉள்ளம்படைத்து, குழந்தைபோல் யாவரிடத்தும் பழகும் தன்மைவாய்ந்தவர்கள். சிவபூஜைச் செல்வராகத்திகழ்ந்தருளுபவர்கள்.

அருணையாதீனம்:

இத்தகையச் சிறப்புகள் வாய்ந்த நமது ஆதீன குருமூர்த்திகளும், நமது ஆதீனமும் சிறப்புற காளத்தி அப்பர் பேரருளைச் சிந்தித்து தெய்வசிகாமணி குருமூர்த்தியின் பொன்னுர் திருவடிகளை வணங்கி வாழ்த்தி வழிபடுவோமாக! குன்றக்குடிக் குமரன் அருள் எங்கும் நிறைவதாகுக.

திருச்சிற்றம்பலம்.

ஜெமினி அச்சகம், 28, மடத்துத்தெரு, கும்பகோணம்.

௨

திருச்சிற்றம்பலம்

சீர்வாழி ! தெய்வ சிகாமணி சீர்அருணை
ஊர்வாழி ! வாழி உலகெல்லாம் !—கார்வாழி !
சித்தமிழ்தம் ஆன சிவாகமம் வாழி ! செழு
முத்தமிழும் வாழி முறை.

திருச்சிற்றம்பலம்